க்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

டர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 19 வெள்ளிக்கிழமை (01.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :126

# அமைதி முயற்சியில் தமிழர் முற்றாக நம்பிக்கை இழப்பு

## பின்லாந்து வெளியுறவு அமைச்சரிடம் தமிழ்ச்செல்வன் நேரில் தெரிவிப்பு

ஹெல்சின்கி,ஏப்ரல்1

நோர்வே நாட்டின் அனுசரணையுடன் கடந்த மூன்றாண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுவரும் அமைதி யற்சிகளில் தமிழர்கள் முற்றாக நம்பிக்கை இழந்துவிட்டனர் என்று தெரிவித்திருக்கிறார் விடுதலைப் பிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

லாந்தின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் எர்கி துமியோஜாவை நேற்றுமுன்தினம் ஹெல்சின்கி சந்தித்துக் கலந்துரையாடிய சமயம் தமிழ்ச்செல்வன் இக்கருத்தை வலியுறுத்தினார்.

...பிய நாடுகளுக்கு விஜயம் மேற் ாண்டுள்ள புலிகளின் அரசியல் விவகாரக் ழு. பின்லாந்துக்கும் விஜயம் செய்தது. அங்கு ளிவிவகாரத்துறை அமைச்சரையும் அமைச் அதிகாரிகளையும் தனித்தனியே சந்தித்து உரையாடியது.

தமிழ்ச்செல்வன் குழுவினருக்கும் அமைச் சர் எர்கிக்கும் இடையிலான சந்திப்பு பின்லாந்து வெளிவிவகார அமைச்சில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

டிசெம்பர் 26ஆம் திகதி ஆழிப்பேரலையால் உயிரிழந்த இலங்கையர்களுக்கு பின்லாந்து அரசின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை, தமிழ்ச் செல்வன் குழுவினரிடம் அமைச்சர் எர்கி பகிர்ந்து

(18ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக ஊழியர் போராட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

...கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் ...பான விவகாரம் தொடர்பாக பல்கலைக் ... ஊழியர்கள் மேற்கொண்டுவந்த வேலை ...தப் போராட்டம் நேற்றுமுதல் இடைநிறுத் பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினருக்கும், ...ணைவேந்தருக்கும் இடையில் நேற்று இடம் ...ற விசேட கலந்துரையாடலின் பின்னரே ...லைநிறுத்தப் போராட்டம் இடைநிறுத்தப் ...து என்று தெரிவிக்கப்பட்டது.

...திவாளர் இடைநிறுத்தம் தொடர்பாக விசேட ...வக் கூட்டம் ஒன்றை எதிர்வரும் 9ஆம்

(18ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நில அதிர்வு!

கொழும்பு,ஏப்.1

கொழும்பின் பல பகுதிகளில் நேற்றுக் காலை ஏற்பட்ட சிறு நில அதிர்வையடுத்து, மக் கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளிலுள்ள பாட சாலைகள் நேரகாலத்துடன் மூடப்பட்டன.

இந்தோனேஷியாவை அண்டிய கடற்பகுதி யில் கடந்த திங்களன்று ஏற்பட்ட நிலநடுக்கத் தின் தொடராக இந்த நிலநடுக்கம் இலங்கையில் ஏற்பட்டிருக்கலாமென்று தெரிவிக்கப்படுகிறது.

கண்டி பள்ளேகல்ல பகுதியிலுள்ள புவியி யல் ஆய்வு நிலையம் நேற்றைய நிலநடுக் கத்தைப் பதிவுசெய்துள்ளது. நேற்றுக்காலை 8.45 முதல் 10.45 மணிக்கிடையில் இந்த அதிர்வு இடம்பெற்றதாகவும் புவிச்சரிதவியல் நிலையத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

வத்தளை, ராகம, பம்பலப்பிட்டி ஆகிய இடங் களில் இந்த நில அதிர்வு உணரப்பட்டிருக்கிறது. இந்த அதிர்வு குறித்து எவரும் பெரியளவில் அச் சப்படத் தேவையில்லையென்று புவிச்சரித வியல் நிலையம் மேலும் தெரிவித்தது.

இதேசமயம், நேற்றுமுன்தினம் முன்னிரவு தமிழ்நாட்டில் தூத்துக்குடி போன்ற இடங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டிருக்கின்றது. (ஐ-12)

## ஏப்ரல் - 1

இன்று ஏப்ரல் முதலாம் திகதி. முட்டாள் கள் தினம். இன்று உங்கள் உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் எவராவது எதையாவது கூறி உங்களை ஏமாற்ற முயற்சிக்கலாம்.

நம்பிவிடாதீர்கள்!
அவதானமாக இருங்கள்!!

## எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பு?

கொழும்பு, ஏப்.1

எரிபொருள்களின் விலைகள் மீண்டும் அதி கரிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பெற்றோல் ஒரு லீற்றர் ரூபா 4.50 சதத்தா லும், டீஸல் ஒரு லீற்றர் ரூபா 8.50 சதத்தாலும் விலை அதிகரிப்புச் செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விலை அதிகரிப்பிற்கான கோரிக்கை யினை, எரிபொருள் விலை அதிகரிப்பிற்கான ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இது

(18ஆம் பக்கம் பார்க்க)

## கரேஜஸ் கப்பல்: சீன உதவிபெற அமெ. ஆட்சேபம்

கொழும்பு,ஏப்.1

தான் வழங்கிய போர்க் கப்பல் தொடர்பாக சீனாவின் உதவியை இலங்கை நாடுவதற்கு அமெரிக்கா ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடற்படையினருக்கு அமெரிக் காவினால் வழங்கப்பட்ட கரேஜஸ் போர்க்கப் பலுக்கு சுடுகலன்களைப் பொருத்துதல், கப்பலைப் பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் என்பவற்

(18ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு

...க்கு - கிழக்கு மாகாண கல்வி பண் பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளை ...ள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங் ...ள அனுப்புவது பற்றிய முழு விவரங்களும் ...ளய உதயனில் வெளியாகும்.

### ஆள் மாறாட்டம் செய்து

## லண்டன் செல்வதற்கு முயன்ற தமிழ் யுவதி விமானத்தில் கைது

கொழும்பு,ஏப்.1

கடவுச்சீட்டில் மோசடிசெய்து படத்தை மாற்றி வேறு ஒருவரின் பாஸ்போர்ட்டில் லண்டனுக் குச்செல்ல முற்பட்ட தமிழ் யுவதி ஒருவர் நேற்றுக் கொழும்பிலிருந்து லண்டன் புறப்படவிருந்த விமானத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

அதிகாலையில் லண்டன் நோக்கிச் செல்ல விருந்த சிறிலங்கன் விமானசேவைக்கு சொந்த மான விமானத்தில் ஆள்மாறாட்டம் செய்து லண் டனுக்கு ஒருவர் பயணமாகவிருக்கிறார் என விமான நிலையக் குற்றப்புலனாய்வு பொலீஸா ருக்குத் தகவலொன்று கிடைத்தது.

இதனையடுத்து, விமானத்தில் இருந்த

(18ஆம் பக்கம் பார்க்க)

## உதயபுரத்தில் மீண்டும் பொலீஸ் சோதனை

சம்மாந்துறை,ஏப்.1

அம்பாறை - கல்முனை பிரதான வீதியிலுள்ள உதயபுர பொலீஸ் காவலரணில் பிரயாணிகளைச் சோதனைக்குட்படுத்தும் நடவடிக்கைகள் கடந்த இரண்டு நாள்களாக மீண்டும் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

கல்முனையிலிருந்து அம்பாறை நோக்கி வரும் சகல பஸ்களும் இப்பொலீஸ் காவலரண் முன்பாக நிறுத்தப்படுகின்றன. பிரயாணிகள்

(18ஆம் பக்கம் பார்க்க)

## ...ன்று ஆண்டுகள் காத்திருந்து தமிழர்கள் ஏமாறியதே மிச்சம்

### தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1

தமிழ்மக்கள் தமக்கு விடிவு கிட்டும் என நம்பி கடந்த மூன்று வருடங்கள் காத்திருந்தனர். ஆனால் அரசினால் தீர்வு எதுவும் முன்வைக்கப் ...தால் அவர்கள் ஏமாற்றம் அடைந்து கிளர்ந் ...ம் நிலைக்கு வந்துவிட்டனர்.

...வந்த அமெரிக்கத் தூதரக அதிகாரி களிடம் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கத் தூதரகத்தின் முதலாவது செய லாளர் பற்றிக்கா மொகோனி, தூதரக அதிகாரி பத் மினி ராஜதுரை ஆகியோர் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராஜா,

(18ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் அடுத்த வாரம் மக்கள் பேரணிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.1

கிழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கப் போரா ளிகள் மீதும், பொதுமக்கள் மீதும் திட்மிட்டு நடத் தப்பட்டுவரும் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்து எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை நல் லூரில் மக்கள் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்த பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கில் இடம்பெறும் படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுடன், இடம்பெயர்ந்த மக் களின் மீள் குடியமர்வைத் துரிதப்படுத்துமாறும் பேரணியில் வலியுறுத்தப்படவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் இருந்து ஆரம்பமாகவுள்ள இந்தப் பேரணி, கோவில் வீதியில் உள்ள போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் அலுவலகத்தை நோக்கிச் செல்லும். (ஐ-12)

இதோ யாழ் மக்களே!

மகாநதி புடைவையகம்
வெற்றிகரமாக தனது 10ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் முகமாக 1.04.2005 - 14.04.2005 வரை வாடிக்கையாளர்கட்கு என்றும் எங்கேயும் இல்லாதவாறு விசேட கழிவு வழங்கப்படும்

சாறிபிளவுஸ் பிஸ் காட்சியறை
இல 16, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
☎ 021-222 2552

எமது வெற்றிக்கு ஆதரவளித்த அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது இனிய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு :- சாறிபிளவுஸ் பீஸ் வகைகளுக்கு கழிவுவழங்கப்படமாட்டாது.

முகூர்த்தப் பட்டு புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம்

மகாநதி புடைவையகம்

இல 4, நவீன சந்தை
சாவகச்சேரி. Tel- 0712 370437

இல 16, நவீன சந்தை
யாழ்ப்பாணம். ☎-2552





யாழ். றோட்டறிக் கழகத்தின் வருடாந்த தொழில் வல்லுநர் விருது வழங்கும் வைபவம் நேற்றுமாலை 'உதயன்' நிறுவன கேட்போர் கூடத்தில நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்நிகழ்வில், அதிதிப் பேச்சாளராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட டாக்டர் எஸ்.சிவன்சுதன் 'தொழில்வல்லுநர்' விருதை யாழ். போதனா வைத்திய சாலைத் தாதி திருமதி கலைச்செல்வி சுரேந்திரராஜ்ஜிடம் வழங்குவதையும் டாக்டர் ரவிராஜ், 'தொழில்வல்லுநர்' விருதை அல்பா மிக்சர் நிறுவன உரிமை யாளர் ப.பாலமுருகனுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பிரபா)

# 'பணச்சுரண்டல்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.1

அருளரின் 'பணச்சுரண்டல்' என்னும் நூலின் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அறிமுகவுரையையும் பொருளியற் பேராசிரியர் வி.நித்தியானந்தன், பொறியியலாளர் ப.விக்கினேஸ்வரன், சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பேரின்பநாதன் ஆகியோரின் ஆய்வுரைகளும் இடம் பெறவுள்ளன.

திருகோணமலை பூகோள பேண் தகுமை வியாபகத்தின் இயக்குநரும் நூலின் ஆசிரியருமான அருளர் ஏற்புரை வழங்குவார். (...-3)

# சிப்பாய்களின் சடலங்கள் வந்தன

கொழும்பு,ஏப்.1

ஹெய்ட்டியில் சர்வதேச அமைதிப்படையினருடன் நிலைகொண்டிருந்தபோது இடம் பெற்ற இரண்டு சம்பவங்களில் உயிரிழந்த இலங்கை இராணுவச் சிப்பாய்கள் இருவரின் சடலங்களும் நேற்று நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டன.

பிற்பகல் இரண்டரை மணியளவில் கட்டுநாயக்க விமானநிலையத்திற்குக் கொண்டு வரப்பட்ட சடலங்கள் பின்னர் பொரளை ஜயரட்ன மலர்ச்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டன.

இராணுவ உயரதிகாரிகள் பூதவுடல்களுக்கு அஞ்சலி செலுத்தியதையடுத்துச் சடலங்கள் குறிப்பிட்ட இராணுவத்தினரது குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. பதுளை மற்றும் பெலயத்த பகுதியைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய்களே ஹெய்ட்டியில் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுனாமி பாதித்த பகுதிகளில் 15 ஆயிரம் வீடுகள் நிர்மாணம்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.1

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 15 ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் மற்றும் பல நாடுகளின் செஞ்சிலுவைக் குழுக்கள், செம்பிறைச் சங்கங்கள் என்பன இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்துள்ளன.

இத்திட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 32 அரச மருத்துவமனைகளையும் புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பகட்ட அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த மாதம் களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்றது.

இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நகலொன்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஜெகத் அபேய சிங்கவினால் இலங்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. (எ-202)

# பாதுகாப்புக் குழுவிடம் சிறுவன் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1

13 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் பாதுகாப்பில் உள்ளார் என்றும் -

பெற்றோர்கள் மற்றும் உரியவர்கள், தகவல் தெரிந்தவர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் -

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது.

இந்தச் சிறுவன் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரால் 'யுனிசெவ்' நிறுவனத்திடம் கடந்த சனியன்று கையளிக்கப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆள்கொணர்வு மனு விசாரணை

யாழ்ப்பாணம்,ஏப்.1

குடாநாட்டில் 1996 - 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற்போனோரின ஆள்கொணர்வு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டவர்களில் நால்வர் தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ். நீதிமன்றத்தில் இடம்பெற்றன.

யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்த வழக்குகளின் விசாரணைகள் இடம்பெற்றன.

அரச உத்தியோகத்தரான சந்திரசேகரன் தொடர்பான வழக்கில் அவரது மனைவியான சோபிக்கா சந்திரசேகரனும் -

சுப்பிரமணியம் சுதாகரன் தொடர்பான வழக்கில் அவரது தாயாரான கமலாதேவி சுப்பிரமணியமும் -

செல்லத்துரை நந்தகுமார் தொடர்பான வழக்கில் அவரது சகோதரியான நசிகலாவும்-

பூதத்தம்பி ஜதீஸ்கரன் தொடர்பான வழக்கில் அவரது தாயாரான ராஜேஸ்வரி பூதத்தம்பியும் - சாட்சியம் அளித்தனர்.

இந்தச் சாட்சியங்களை ஏற்றுக்கொள்வதாக அங்கு பிரசன்னமாகியிருந்த முதலாவது பிரதிவாதி லான்ஸ்கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நீதிவானிடம் தெரிவித்தார்.

2 ஆம் பிரதிவாதியான முகாம் அதிகாரியான லலித்குமார; மூன்றாவது பிரதிவாதியான ...லி படை அதிகாரி, நான்காவது பிரதிவாதியான முன்னாள் இராணுவத் தளபதி, ஐ...தாவது பிரதிவாதியான சட்டமா அதிபர் ஆகியோர் சார்பில் அரச சட்டவாதி சுமுது விக்கிரமாரச்சி ஆஜராகின்றார் என்றும் -

சாட்சியங்களை அவர் குறுக்குவிசாரணை செய்ய தவணை வழங்கும் படியும் - மன்றில் பிரசன்னமாகி இருந்த இராணுவச்சட்ட ஆலோசகர் தாரக சல்காது கோரினார்.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான மே மாதம் 9 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார். (ஐ-3-7)

# காணாமற்போனோர் பற்றிய விசாரணை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

குடாநாட்டில் 96-97ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனவர்கள் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளவர்கள் தொடர்பான குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளின் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

யாழ்.பொலீஸ் நிலையத்தில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த விசாரணைக்கு கீழ்க் காண்போரின் பெற்றோர், பாதுகாவலர், முறைப்பாட்டுக்காரர் ஆகியோரை சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

இவர்களில் எவராவது இடம்பெயர்ந்து அல்லது வெளிநாட்டில் வசித்தால் அவர்களது உறவினர்களைச் சமுகமளிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு செய்தோர் விவரம் வருமாறு:-

★ செல்லையா கந்தசாமி - அளவெட்டி (கோவை இல.73)

★ கந்தையா ராஜரத்னம் குலதாஸ் - வரணி (கோ.இல.209)

★ பரமசாமி சசீகரன் - தனங்களப்பு (கோ.இல.365)

★ ரத்னபாலன் கணேஸ்வரன் - மூளாய் (கோ.இல.444)

★ சதாசிவம் விக்னேஸ்வரன் - கைதுசெய்யப்பட்ட இடம் சாவகச்சேரி. (கோ.இல.492)

★ செல்வநாயகம் தனபாலசிங்கம் - கைது செய்யப்பட்ட இடம் அரியாலை. (கோ.இல.524)

சின்னத்தம்பி லக்சுமிகாந்தன் - கைது செய்யப்பட்ட இடம் வரணி. (கோ. இல.564)

★ சிதம்பரப்பிள்ளை கிருபாகரன் - கைது செய்யப்பட்ட இடம் தனங்களப்பு (கோ.இல589),

★ துரை மகாலிங்கம் - கைது செய்யப்பட்ட இடம் கிளாலி, கொடிகாமம் (கோ.இல.705)

★ விஜேகுமார் சுதமாலா - கைதுசெய்யப் பட்ட இடம் நுணாவில் கோவில் (கோ.இல.753).

★ வினாசித்தம்பி கோணேஸ்வரன் - கைது செய்யப்பட்ட இடம் அரியாலை. முறைப்பாட்டுக்காரர் - விஜயராஜா (கோ.இல.756)

★ சிவலிங்கம் சசீகரன் - இல.687/24, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (கோ.இல.596) முறைப்பாட்டுக்காரர் - திருமதி சசீகரன் - மனைவி.

★ சி.பாலசிங்கம் - கைதடி, நுணாவில், சாவகச்சேரி. (கோ.இல.65)

★ எஸ்.சிவாதரி - ஏழாலை மேற்கு, ஏழாலை. (கோ.இல.466)

★ எஸ்செல்வரஞ்சன், இல.25/7, கோபால்வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (கோ.இல.471) (ஐ-3)

# நீதிமன்றங்களுக்கு விடுமுறை

யாழ்ப்பாணம்,ஏப்.1

ஏப்ரல் மாத பருவகாலக் கொடுப்பனவுக்காக யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களின் அமர்வுகளும் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இடை நிறுத்தப்படும் என்றும் -

மீண்டும் மேல் நீதிமன்றத்தின் அமர்வுகள் இம்மாதம் 20ஆம் திகதியும், மாவட்ட நீதிவான் நீதிமன்றங்களின் அமர்வுகள் இம்மாதம் 18ஆம் திகதியும் ஆரம்பமாகும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# தற்போதைய காலநிலைபற்றி மக்கள் அஞ்சத் தேவையில்லை

## வானிலை நிலையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1

தற்போது ஏற்பட்டுள்ள மப்பும் மந்தாரமுமான காலநிலையால் அச்சம் எதுவும் இல்லையென திருநெல்வேலியிலுள்ள வானிலை ஆராய்ச்சி நிலைய அதிகாரி தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக வானிலையில் ஏற்பட்டுள்ள மப்பும் மந்தாரமுமான காலநிலை தொடர்பாகக் கேட்டதற்கே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை சுமத்திராத் தீவில் பூகம்பம் ஏற்பட்டது. அது நடந்த கையோடு கடந்த சில தினங்களாக வெப்பம் குறைந்து புழுக்கம் நிறைந்த காலநிலை நில... வருகிறது.

இதையிட்டு மக்கள் மத்தியில் அச்சநிலை காணப்பட்டது. இதனையடுத்தே, இதனால் மக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. வழமைபோல் இந்த மாதங்களில் ஏற்படும் மேற்காவுகை மழை காரணமாகவே இத்தகைய காலநிலை ஏற்பட்டுள்ளது.

இன்னும் ஓரிரு தினங்களில் மழை பெய்யக்கூடும் - இவ்வாறு வானிலை அவதான நிலைய அதிகாரி கூறினார். (ஓ-13-12)

# ஹெரோயின் கடத்திய அறுவர் கைது! நான்கு இந்தியர்; இருவர் இலங்கையர்

கொழும்பு,ஏப்.1

இந்தியாவில் இருந்து படகில் ஹெரோயின கடத்தி வந்தார்கள் எனக் கூறப்படும் நான்கு இந்தியர்களும், இரண்டு இலங்கையர்களும் தலைமன்னார் கடலில் வைத்துக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தியாவிலிருந்து தலைமன்னார் கடற்பகுதிக்கு வந்த படகொன்றின்மீது சந்தேகம் கொண்ட கடற்படையினர் அதை சோதனைக்குட்படுத்தினர். அதனுள் மறைத்துவைக்கப்பட்டிருந்த 1,500 கிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருளை அவர்கள் கைப்பற்றினர்.

தலைமன்னார் கடலில் உள்ள ஏழாவது மணற்திட்டி என்ற இடத்துக்கு வருமாறு மன்னாரில் உள்ள நபர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது எனப் பொலீஸாருக்கு இரகசியத் தகவலொன்று கிடைத்தது. இதை அடுத்து குறிப்பிட்ட நபரைப் பின்தொடர்ந்து சென்ற பொலீஸார கடற்படையினரின் உதவியுடன் சந்தேகப்பட்ட படகைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

படகில் தமிழ்நாட்டின் பிரபல வர்த்தகர் ஒருவரும் கிளிநொச்சியில் கடை வைத்திருக்கும் வியாபாரி ஒருவரும் இருந்தனர் என்று பொலீஸார் கூறினர்.




கிளிநொச்சியில் வசிக்கும் வியாபாரி கடந்த வருடம் இதுபோன்ற சட்டவிரோத பொருள்கள் கடத்திக்கொண்டு வந்தபோது கைதுசெய்யப்பட்டு சிறையில் இருந்தவர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

கைதான நான்கு இந்தியர்களும், இரண்டு இலங்கையர்களும் நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மன்னார் மாவட்ட உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ரொஹான் விஜேசிங்கவின் பணிப்புரைக்கு அமைய இன்ஸ்பெக்டர் என்.ஈ.சில்வா விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

# நியாஸ் தீவில் நேற்றும் நிலஅதிர்வுகள் பீதியில் மக்கள் அல்லோலகல்லோலம்

ஜகர்த்தா,ஏப்.1

இந்தோனேஷியாவில் நியாஸ் தீவுக்கு அருகில் நேற்றுக்காலை நில அதிர்வுகள் ஏற்பட்டன. முதலாவது நில அதிர்வு 6.3 ரிச்டர் புள்ளியாகப் பதிவானது.

இந்த அதிர்வுகளைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் ஓட்டம் பிடித்தனர். பீதியில் உறைந்திருக்கும் அவர்கள் வழமையான - நாளாந்த - நடவடிக்கைகளில் இருந்து விலகியுள்ளனர்.

மனோவியல் ரீதியாகப் பாதிப்புற்றிருக்கும் அவர்களின் நிலைமை பரிதாபகரமானது என்று அங்கிருக்கும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நியாஸ் தீவுப்பகுதிகளுக்கான நிவாரண நடவடிக்கைகள் காலநிலை மாற்றம் காரணமாக மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன.

வெளிநாட்டு நிறுவனங்கள் பல நிவாரண உதவிகளைப் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு வழங்கிவருகின்றன. ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் பல்வேறு வகையிலான உதவிகளை நியாஸ் தீவுப்பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண பணியாளர்கள் பல்வேறு மீட்புப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெட்டவெளிப் பகுதியொன்றில் வீடுவசல்களை இழந்த பல்லாயிரக்கணக்கான மக்களை நிவாரணப் பணியாளர்கள் தங்க ...வைத்துள்ளனர்.

இந்தோனேஷியாவில் நேற்றுக்காலை ?.45 மணியளவில் உணரப்பட்ட நிலநடுக்கங்கள் இலங்கை, இந்தியா, மலேஷியா போன்ற நாடுகளின் கரையோரப் பகுதிகளில் உணரப்பட்டாலும் அதுகுறித்து மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற பாரிய நிலநடுக்கத்தின் பின்னர் இவ்வாறு நிலஅதிர்வுகள் இடம்பெறுவது சாதாரணமானது என்றும்-

அவை பாதிப்புக்களை ஏற்படுத்துமாயின் அதுகுறித்து மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.1ரிச்டராகப் பதிவான நேற்றைய நில அதிர்வுக்குப் பின்னர் பலமுறை அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# உண்மையை மறைப்பது பொய்க்கு உடந்தை

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 61ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் நடைபெறுகின்றது.

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விரிவான அறிக்கை ஒன்று, இதையொட்டி சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

பிரான்ஸின் தலைநகர் பாரிஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் தலைவர் ச.வி.கிருபாகரன் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றார். அதில் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் ஈழத்தமிழர்களின் யதார்த்தப் புறச்சூழ் நிலையை - வாழ்வியல் அவலங்களை - அப்படியே படம்பிடித்துக் காட்டுவன.

ஆழிப்பேரலை அவலம் நேர்ந்து நூறு நாள்கள் ஆகப்போகின்றன. ஆனால், ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அந்தப் பேரழிவிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் உரிய நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் குறிப்பிடத்தக்க அளவுகூட ஆரம்பிக்கப்படவில்லை. இந்நடவடிக்கைகளுக்காகச் சர்வதேச சமூகம் விரைந்து வழங்குவதற்கு முன்வந்த உதவிகளைக்கூட ஈழத்தமிழர்களுக்குக் கிட்டவிடாமல் முட்டுக்கட்டை போட்டு மறித்துவருகின்றது கொழும்பு அரசு.

ஆழிப்பேரலை அவலம் மனித உரிமை மீறல் பாதிப்பு அல்ல. ஆனால், அந்த அவலத்தால் மோசமான அழிவுகளுக்கு உள்ளான ஒரு மக்கள் சமுதாயத்துக்கு அந்த அழிவுகளிலிருந்து மீள்வதற்காகச் சர்வதேச சமூகம் வழங்கும் உதவிகள் அந்தச் சமுதாயத்துக்குக் கிட்டுவதற்குவிடாமல் திட்டமிட்டுத் தடுப்பது பெரும் மனித உரிமை மீறலாகும்.

மீள்கட்டமைப்புக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசியல் இணக்கப்பாடு வராததே இந்த இழுபறிக்கு - தாமதத்துக்கு - காரணம் என்று இலங்கை அரசுத் தரப்பில் சாக்குப் போக்குக் கூறப்படலாம். ஆனால், இயற்கைப் பேரழிவால் பாதிக்கப்பட்ட ஒரு மக்கள் சமுதாயத்துக்கு அவசர நிவாரண மற்றும் மீள்கட்டுமான உதவிகளை விரைந்து வழங்குவது அந்த மக்களின் அரசுதானே எனக் கூறிக்கொள்ளும் அரசுக் கட்டமைப்பின் முழுக் கடமையும் பொறுப்புமாகும். அந்த நடவடிக்கையைத் தாமதமின்றி முன்னெடுப்பதற்காகச் சகல வாய்ப்பு, வசதிகளையும் - உப்புச்சப்பற்ற காரண, காரியங்கள், விளக்கங்களைக் கூறிச் சமாளியாமல் - பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்காமல் - செய்யவேண்டியது அரசின் பிரதான கடமையாகும்.

அதைச் செய்யாமல் அரசு இழுத்தடிப்பது, அந்த மக்கள் சமுதாயத்துக்கு எதிரான மனித உரிமை மீறலாகவே கொள்ளப்படவேண்டும்.

இயற்கைப் பேரழிவால் பாதிப்புற்ற மக்களுக்கு விரைந்து செய்யவேண்டிய அவசர - அவசிய - பணியையும், நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமல், திட்டமிட்ட முறையில் அதை இப்படி இழுத்தடித்து வருவது ஒருவகையில் அரச பயங்கரவாதமாகவும் கருதப்படக் கூடியதாகும்.

ஏற்கனவே இரண்டு தசாப்தகால யுத்தத்தினால் பாதிப்புற்று அவசர - அவசிய - தேவைகளை நிறைவு செய்யமுடியாமல், அகதி முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் அவல வாழ்வு வாழ்ந்துவரும் ஈழத் தமிழ்மக்கள் பல்லாயிரக்கணக்கானோரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் கொழும்பு அரசு எடுக்கவில்லை. அரசுப் படைகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்த - தமிழ் பொதுமக்களின் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலபுலன்கள், பயன்தரு காணிகள் இன்னும் அந்த மக்களிடம் மீளளிக்கப்படவில்லை.

யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்து மூன்றாண்டுகள் கடந்தும் அவலத்தில் ஆழ்ந்திருக்கும் இந்த மக்களின் கஷ்டங்களைக் களையவும், அவர்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்யவும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல், தமிழ் மக்களை அந்தரிக்க விட்டு, காலத்தை இழுத்தடித்து வருகிறது அரசு.

இதே ஏமாற்றும் போக்கே ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தின் நிவாரண மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகள் விடயத்திலும் காட்டப்படுகின்றது.

இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்கள் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்ற ஓர் அரசின் கீழ் 'அரச பயங்கரவாதம்' போன்று தொடரும்போது அதைக் கண்டிக்காமல் - உண்மையை அம்பலப்படுத்திப் பகிரங்கப்படுத்தாமல் - காலத்தை இழுத்தடிக்கும் அரசின் போக்குக்கு ஒத்துப்போகும் வகையில் - ஐ.நா. போன்ற பொது அமைப்புகள் மௌனம் சாதிப்பது, அவையும் இத்தகைய மனித உரிமை மீறல்களுக்குத் துணை போய் அந்தக் குற்றத்தை இழைத்தவையாகக் கருதவைக்கும்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, இந்த விடயங்கள் குறித்து நன்கு விசாரணை செய்து, அவற்றை அம்பலப்படுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அமைப்புகள் மனம் தளராது முன்வர வேண்டும்.

# நிரந்தர வீடமைப்புக்கான நிதி உள்ளது; அரசின் அனுமதிக்காகக் காத்திருக்கிறோம்

## கரித்தாஸ் செயலாளர் நாயகம் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.1

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான நிதி எம்மிடம் உள்ளது. ஆயினும், தற்போது நிரந்தர வீட்மைப்புத் தொடர்பாகப் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. ஆகவே, அரசின் அனுமதிக்காக நாம் காத்திருக்கின்றோம்.

– இவ்வாறு ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகளை வழங்கிவரும் 'கரித்தாஸ்' அமைப்பின் பிரான்ஸ் நாட்டுச் செயலாளர் நாயகம் பீற்றர் லெவானி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நிதி எம்மிடம் உள்ளது. இது தொடர்பாகப் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. இந்தப் பணியைத் தொடங்குவதற்கு நாம் அரசின் அனுமதியை எதிர் பார்த்துள்ளோம். ஆயினும், பாதிக்கப்பட்ட மக்களின் விருப்பப்படியே எமது திட்டங்களைச் செயற்படுத்துவோம். எமது திட்டங்களை அவர்கள் மீது திணிக்கமாட்டோம்.

சர்வதேச மனித உரிமைகளை மதித்து வேலை செய்யவே நாம் விரும்புகின்றோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசரகாலப் பணிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன.

ஆகவே, அவர்களின் நிரந்தர வீடமைப்புத் தொடர்பாக அதிகம் அக்கறை காட்ட வேண்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரித்தாஸ் நிறுவனத்தால் இங்கு மேற்கொள்ளப்பட்ட முதற் கட்டப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. அவற்றை நேரடியாகப் பார்வையிடுவதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன்.

எமது நிறுவனத்துக்கு அமெரிக்கா, ஐரோப்பா உட்படப் பல்வேறு நாடுகள் நிதியுதவி வழங்கியுள்ளன. அந்த நிதியைச் சரியான முறையில் பயன்படுத்தி இங்கு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். அதேவேளை, இங்கு செயற்படுத்தப்படும் திட்டங்கள் உதவி வழங்கிய நாடுகளுக்குக் காட்டப்படும் - என்றார்.

கரித்தாஸ் நிறுவனத்தின் யாழ்.மாவட்டத்துக்கான திட்ட இணைப்பாளர் மைக் தெரிவித்ததாவது:-

நிறுவனங்களிடம் மக்கள் தங்கி வாழப் பழகிக் கொள்ளாதவாறு அவர்களுக்கான உதவிகள் அமையவேண்டும்.

சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பு போர்க் காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகளையும் ஈடு செய்ய உதவும் என நான் நம்புகின்றேன். தற்போது 900 தற்காலிக வீடுகளைப் பாதிக்கப்பட்டோருக்கென அமைக்கின்றோம். அவற்றில் 500 வீடுகள் முழுமையாக அமைக்கப்பட்டு விட்டன. மிகுதி வீடுகளின் வேலைகள் நடைபெறுகின்றன.

அரசு - விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்புகளுடனும் நாம் இணைந்து பணியாற்றி வருகின்றோம். இதனால் எமக்கு எந்த விதமான பிரச்சினைகளும் இல்லை.

பாதிக்கப்பட்டோர் சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான கடனுதவிகளையும் வழங்கவுள்ளோம் – என்றார்.

கரித்தாஸ் நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் அருட்திரு.சி.ஜி. ஜெயக்குமார் தெரிவிக்கையில் -

பாதிப்புற்ற மீனவருக்கு 400 மீன்பிடிப்படகுகளையும் அவற்றுக்கான இயந்திரங்களையும் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இயந்திரங்கள் ஜப்பானில் உள்ள யமகா நிறுவனத்திடமிருந்து கரித்தாஸினால் நேரடியாகப் பெறப்படவுள்ளன.

இதனைவிட, 4 மின் பிறப்பாக்கிகளை முல்லைத்தீவு நலன்புரி நிலையங்களுக்கும், ஒருமின்பிறப்பாக்கியை மணற்காடு நலன்புரி நிலையத்துக்கும் நாம் வழங்கியுள்ளோம் – என்றார்.

கரித்தாஸ் நிறுவனத்தின் அபிவிருத்திக்கான பணிப்பாளர் அலோசியஸ் ஜோனும் இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டார்.

வடமராட்சிப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கும் இக்குழுவினர் நேரடியாக விஜயம் செய்தனர். (8-7)




தந்தை செல்வாவின் 107 ஆவது பிறந்த நாள் நிகழ்வு நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு முன்றிலில் உள்ள செல்வாவின் நினைவுத்தூபியில் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, என்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் தந்தை செல்வாவின் நினைவுத்தூபிக்கு மலர் மாலை அணிவிப்பதை முதல் இரு படங்களிலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தந்தை செல்வாவின் நினைவிடத்துக்கு மலர் அஞ்சலி செலுத்துவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்:கவிதரன்)

# தந்தை செல்வா பிறந்த நாள் நினைவு நிகழ்வு நேற்று நடந்தது

நல்லூர்.ஏப்.1

தந்தை செல்வாவின் 107 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்.நகரில் அமைந்துள்ள அவரது நினைவாலயத்தில் விசேட நினைவு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

தந்தை செல்வா அறங்காவல் சபையின் தலைவர் முன்னாள் பேராயர் அருட்திரு. எஸ்.ஜெபநேசன் அடிகளார் தலைமையில் மேற்படி நிகழ்வு இடம் பெற்றது.

பேராயார் ஜெபநேசன் அடிகளார், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, என்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தனர். நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களும், பொதுமக்களும் தந்தை செல்வாவின் சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அதன்பின்னர் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன. (ஓ-111)

# சமூக விரோதிகள் திருந்த சுவரொட்டி எச்சரிக்கை

வவுனியாப் பகுதியில் சமூக விரோத செயல்களில் ஈடுபட்டுவரும் நபர்கள் தமது நடவடிக்கைகளை 15 நாள்களுக்குள் நிறுத்தாவிட்டால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று குறிப்பிடும் சுவரொட்டிகள் வவுனியாவில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. இந்தச் சுவரொட்டி சீர்திருத்தக் குழு என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியாவின் பிரதான இடங்களிலும் மகளிர் பாடசாலைகளை அண்டிய பகுதிகளிலும் இது ஒட்டப்பட்டுள்ளது.

சேஷ்டை புரிபவர்கள், மோதலில் ஈடுபடுபவர்கள், பாலியல் துஷ்பிரயோகம் செய்பவர்கள், அரைகுறை ஆடை அணிந்து திரிபவர்கள், புகைபிடிக்கும் பாடசாலைச் சிறுவர்கள் என்று அதில் சமூக விரோதச் செயல்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன.

இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் தமது சகல நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும் என்றும் ஆண், பெண் என்றோ மாணவ, மாணவிகள் என்றோ பார்க்கப்படாது தண்டனை பொதுவாக வழங்கப்படும் என்றும் அச்சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சமூகச் சீர்கேட்டில் ஈடுபட்டவர்கள் என்று கூறப்படும் மூன்று இளைஞர்கள் வெவ்வேறு இடங்களில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-164)

## நாளை

*பங்குனி 20*
*சனிக்கிழமை*
*02.04.2005*
*திதி : அட்டமி*
*பிற்பகல் 4.23 வரை.*
*நட்சத்திரம் : பூராடம்*
*முன்னிரவு 7.18 வரை.*
*சுபநேரம் : 3.10 - 4.40*
*ராகுகாலம் : 9.10 - 10.40*
*(யாவும் பழைய நேரப்படி)*

## உதயவாக்கு

எத்தனை காலம் உயிருடன் வாழ்ந்தோம் என்பதல்ல. எமது ஆயுள் இறந்த பின்னர் நாம் எத்தனை காலம் மற்றவர்களால் மறக்கப்படாமல் இருக்கின்றோம் என்பதே எமது ஆயுள்.

*– கவிஞர் கண்ணதாசன்.*

# நலன்புரி நிலையத்தில் அம்மைநோய் அபாயம்

கரவெட்டி.ஏப்.1

வடமராட்சி சுப்பர் மடத்தில் உள்ள நலன்புரி நிலையத்தில் அம்மை நோய் பரவுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நலன்புரி நிலையத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தற்போது அதிகரித்துவரும் வெப்ப நிலை காரணமாக இங்கு அம்மை நோய் பரவத் தொடங்கியுள்ளது.

கடந்த மாத நடுப்பகுதியில் இங்கு தங்கியுள்ளவர்களில் 10 பேருக்கு அம்மை நோய் பீடித்தது. அதனையடுத்து சுனாமி சுகாதாரப் பிரிவினர் அவர்களுக்குச் சிகிச்சையளித்தனர். ஆனால், தற்போது மீண்டும் அம்மை நோய் 40 பேருக்குத் தொற்றியுள்ளதாக பருத்தித்துறை சுனாமி அனர்த்த செயலணிக் காரியாலயத்திலுள்ள சுனாமி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

தற்போது மேற்படி நோயாளரைத் தனிமைப்படுத்தி சிகிச்சைகள் மேற்கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஓ-70)

# சுனாமி நிவாரண விநியோகம் இன்று முதல் விரைவுபடுத்தப்படும்

கரவெட்டி.ஏப்.1

சுனாமியால் பாதிப்புற்றவர்களுக்கு உலர் உணவு அட்டைக்கான நிவாரணப் பொருள்களை இன்று முதல் விரைவாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி நிவாரணத்துக்கு 200 ரூபா பெறுமதியான முத்திரைகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் இதுவரை வழங்கப்படாத முத்திரைகளுக்கு இன்று முதல் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என்று சுனாமி அனர்த்தச் செயலணிப் பணிப்பாளர் எஸ்.பாலையா தெரிவித்தார்.

இதேசமயம் 175 ரூபா சமுர்த்தி வங்கிகள் ஊடாகப் பணமாக வழங்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-70)

**UNIT**

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Compaq PIII கணனிகள் வியப்பூட்டும் விலையில்.

நாங்கள் என்றும் புதுமையை விரும்புபவர்கள். அதுவும் எமது புதுவருடத்தில் புதியவையுடன்

புத்தம் புதிய P4 கணனிகள் பிரமிக்கத்தக்க கொழும்பு விலைக்கே.

**Ultra Speed stock clearing sale**

PC/CD/VCD/DVD **வூவர்கள்** 1400/- முதல்

சகல கணனி உதிரிகளும் கொழும்பு விலைக்கே.

2250/- - 1750/- மட்டுமே
4200/- - 3600/- மட்டுமே(FM)
11500/- - 9900/- (கோம் தியேட்டர்)
16500/- - 14900/- (கோம் தியேட்டர்)
28000/- - 24900/- (கோம் தியேட்டர்)

- ☆ இவ்வளவு குறைந்த விலையில் எப்படி விற்க முடிகிறது! தரமான பொருட்கள் வழங்கப்படுகின்றனவா?
- ☆ இப்படி சந்தேகங்கள் போட்டியாளர்களால் வதந்திகளாக விதைக்கப்படுகின்றது.
- ☆ எங்கள் நிறுவனம் உலக அளவில் போட்டி போடும் ஒரு நிறுவனம்.
- ☆ பரீட்சித்துப் பார்ப்பதற்கென்றே தனி அலகை நிறுவி இருப்பவர்கள் நாங்கள்.

அத்தி பூத்தது போல் வரும் சந்தர்ப்பங்களை நழுவ விடாதீர்கள்.

**An Indian Enterprise**

தரமான கணனி உதிரிகளை குறைந்த விலைக்கு, சர்வதேச தர நிர்ணய அங்கீகாரம் பெற்றநிறுவனங்களிடமிருந்து இறக்குமதி செய்து வழங்குகிறோம்.

Note: சலுகை விலை கையிருப்பு உள்ளவரை மட்டுமே. எங்கள் பொருட்கள் யாவும் வாரண்டியுடன் கூடியது.

**347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.**


## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

நெடுந்தீவு,ஏப்.1

நெடுந்தீவுப் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கை எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச சபையும், நெடுந்தீவுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-112)


**The International Committee of the Red Cross (ICRC) would like to fill the following vacant position in the Water &Sanitation unit**

ICRC

### Assistant

Main Duties:

- To write reports in correct English with windows XP Word
- To meet and co-ordinate activities and explain ICRC Water & Sanitation Programmes with local authorities
- To organise the work programme for a staff of 20 persons including plumbers, masons and helpers.
- To follow-up of the establishment of a maintenance system on the hand pumps and bucket pumps in the Vanni - formation of Water Committees, selection and training of caretakers, follow-up of the work of the technical officers.
- Organize the collection of data related to water access for the Vanni.
- Management of the Water and Sanitation data bases in collaboration with Water and Sanitation engineer.
- Keep and update well files.
- Order the purchase of equipment and materials on the local market and assure quality control.
- Follow-up of the Water and Sanitation stock.
- Issue salary sheets for the Water and sanitation team and collect working advances.
- Interpreter for the Water and Sanitation engineer.

**Requirements**

- 3 years of experience with other organizations or highly professional back-ground.
- Technical or Engineering background/experience desirable
- English and Tamil mandatory, knowledge of Singhale and other languages an advantage
- Computer literate.
- Professionalism, integrity, interpersonal skills, goal focus.

**Place of Employment: Puthukudiyiruppu**

If you would like to be part of a dedicated team in an international environment, please send us your CV and motivation letter including your contacts to the following address, **latest by 08.04.05.**

**The ICRC,**
**Kanagapuram,**
**Kilinochchi,**

ICRC is an equal opportunity employer and qualified women are strongly encouraged to apply.

(C/41919) Only short listed candidates will be contacted



**SAAMSTECH இன் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி**

**பயிற்சியும் பணி நியமனமும்**

வரும் 2006ஆம் ஆண்டுக்குமுன் இலங்கையில் முழுமையான ஆங்கிலத்தினை விருத்திசெய்யும் நோக்கோடு 50000 மாணவர்களுக்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் SAAMSTECH இன் புதிய முறையிலான கற்பித்தலுக்கும் மற்றும் கற்பித்தல் தொடர்பான செயற்பாடுகளுக்கும் தயார் செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சிநெறி.

| | | |
|---|---|---|
| பயிற்சிக்காலம் | : | 3 மாதங்கள். தினமும் நான்கு மணிநேரம், வாரத்தில் 5 நாட்கள் |
| பயிற்சி ஆரம்பம் | : | 18.04.2005 |
| பயிற்சிக் கட்டணம் | : | ரூபா 12000/- |
| கல்வித்தகுதி | : | க.பொ.த உயர் தரத்தில் 3 பாடங்களில் சித்தி |

பூர்த்திசெய்யப்பட்ட சுயவிபரக்கோவை மற்றும் சான்றிதழுடன் நேரில் வரவும்.

பாடநெறியினைப்பூர்த்திசெய்யும் அனைவருக்கும் மாதம் ரூபா 6000/- உடன் எமது நிறுவனத்தில் பணி நியமனம்.

முதலில் வருபவர்கள் மற்றும் தகுதி அடிப்படையில் 40 பேர் மட்டும் பாடநெறியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(43714) SAAMSTECH, 841, HOSPITAL RD, JAFFNA. Ph: 021 - 4591571




# கண்ணிவெடி பாதிப்புப் பற்றி செயற்றிட்ட செயலமர்வு

வலி.தெற்கு,ஏப்.1

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் கடந்த மாதம் 27, 28ஆம் திகதிகளில் கண்ணிவெடி பாதிப்பு நிவாரணம் தொடர்பான செயற்றிட்டச் செயலமர்வு முகிழ்நிலை மாணவர்கள் மத்தியில் இடம்பெற்றது.

'யுனிசெவ்' நிறுவனத்தினரின் அனுசரணையுடன் இச்செயலமர்வு இடம்பெற்றது.

கண்ணிவெடிகளில் இருந்து பாடசாலை மாணவர்களையும், பொதுமக்களையும் எவ்வாறு பாதுகாப்பது, கண்ணி வெடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நிவாரணம் வழங்குவது, பாடசாலைக் கலைத்திட்டத்தில் இந்த எண்ணக் கருவினை எவ்வாறு இணைப்பது என்பவை தொடர்பான நடைமுறைகள் இச்செயலமர்வின்போது செயற்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் கண்ணிவெடி நிபுணத்துவ ஆலோசகர் எஸ்.ஜெயவர்த்தனா, வளவாளர் எஸ்.அழகரத்தினம், எஸ்.கே.யோகநாதன், உபபீடாதிபதி பா.தனபாலன், பி.சத்தியபாலன் ஆகியோர் வளவாளர்களாகப் பணியாற்றிச் செயலமர்வை நடத்தினர்.

(ஒ-152)

# சமூகப் பாதுகாப்புச் சபையின் வெளிக்கள அலுவலர்கள் நியமனம்

கொக்குவில்,ஏப்.1

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் வெளிக்கள உத்தியோகத்தர்களாக அண்மையில் நியமனம் பெற்றவர்கள் பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் விவரம் வருமாறு:-

ம.இந்திரகுமார் (கரவெட்டி, வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம்), த.தர்மசோதி (உடுவில், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), ஆ.விமல்ராஜ் (வேலணை பிரதேச செயலகம்), நா.சசிக்குமார் (ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை), செ.பிரகாஷ் (கோப்பாய், பருத்தித்துறை பிரதேச செயலகம்) -

ந.யசோதா (தெல்லிப்பழைப் பிரதேச செயலகம்), இ.சசிக்குமார் (சங்கானை, சாவகச்சேரி பிரதேச செயலகம்), ந.நரேந்திரன் (நெடுந்தீவு, உ.அ.உ. பணிமனை), ந.தவேந்திரன் (நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்).

இவர்களுக்கான நியமனம் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைப் பொது முகாமையாளரினால் வழங்கப்பட்டுள்ளது. (ஒ-76)



மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தினரால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த 21 மாணவர்களுக்கு ரூபா ஐயாயிரம் வீதம் வங்கியில் வைப்புச்செய்யப்பட்டு வைப்புச் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட மாணவி ஒருவருக்கு மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் ச.கிருஷ்ணன் வைப்புச் சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: கைதடிச் செய்தியாளர்)*

# சாவற்கட்டு கிராமத்தில் நடமாடும் வைத்தியசேவை

வலி.தெற்கு,ஏப்.1

ஆனைக்கோட்டை - சாவற்கட்டுக் கிராமத்தில் அமைந்துள்ள தாரகா விதவைகள் சங்கத்தில் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை நிர்வாக சங்கத்தினர் நடமாடும் இலவச வைத்திய சேவையொன்றை ஆரம்பித்துள்ளனர்.

அப்பிரதேசத்தில் வாழும் மக்களின் நலன் கருதியே இந்த வைத்திய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் முற்பகல் 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை மேற்படி வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் குழுவினர் அங்கு சென்று சாதாரண நோயாளர்களுக்குச் சிகிச்சையளித்து வருகின்றனர்.

மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை டாக்டர் திருமதி சி.அம்பலவாணர் இந்த நடமாடும் இலவச வைத்திய சேவையை ஆரம்பித்துவைத்துள்ளார்.

(8-152-203)

# உடுப்பிட்டி வடக்கு விவசாயிகளுக்கும் சுனாமி நிவாரணம் வழங்கவேண்டும்

## பிரதேச அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.1

உடுப்பிட்டி வடக்கு விவசாயிகளுக்கும் சுனாமி நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு உடுப்பிட்டி வடக்குப் பிரதேச அபிவிருத்திச் சங்கம் யாழ். அரச அதிபர் கே.கணேஸிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளது.




அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஆழிப்பேரலையால் கடற்கரைப்பகுதி அழிவுக்குள்ளான போது அப்பகுதியில் இருந்த கட்டாக்காலி ஆடு, மாடுகள் உடுப்பிட்டி வடக்குப் பிரதேசத்திலுள்ள கெருடாவில் வடக்கு, மயிலியதனை, நாவலடி, ஊரிக்காடு போன்ற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தன. அவை அப்பகுதிகளில் விளைந்திருந்த பயிர்களைச் சேதமாக்கின.

எனவே, அப்பகுதிகளையும் பாதிக்கப்பட்ட பகுதிகளாகக் கருதி, அப்பிரதேச விவசாயிகளுக்கு சுனாமி நிவாரணம் வழங்கப்படவேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு சில விவசாயிகள் சுனாமி நிவாரணம் பெறும்போது 90 வீதமான விவசாயிகள் நிவாரணம் இன்றி உள்ளனர்.

எனவே, சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கருணை அடிப்படையில் அரச அதிபர் உதவமுன்வரவேண்டும் என்று அதில் உள்ளது.

மேற்படி மகஜரின் பிரதிகள் பருத்தித்துறைப் பிரதேச செயலர், கமநல சேவைகள் திணைக்களப் பெரும்பாக அலுவலர், உள்ளூராட்சி நகர சபைச் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஒ-185)

# துணை மருத்துவ சேவைக்கு பயிலுநர்கள் ஆள்சேர்ப்பு

தென்மராட்சி.ஏப்.1

வடக்கு - கிழக்கு மாகாணச் சுகாதாரத் திணைக்களத்தில் உள்ள துணை மருத்துவ சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பயிலுநர் ஆள்சேர்ப்புக்கான விண்ணப்பம் மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளது.

மருந்தாளர், வைத்திய இரசாயனகூட தொழில்நுட்பவியலாளர், பௌதிக சிகிச்சையாளர், எக்ஸ் - கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர், பொதுசன சுகாதார இரசாயன கூடஎவியலாளர், மருந்துக் கலவையாளர் ஆகிய பதவிகளுக்கே ஆள்சேர்ப்பு நடைபெறவுள்ளது.

பயிலுநர்களாகத் தெரிவுசெய்யப்படுவோர் பயிற்சிக் காலத்தின் பின்னர் மாகாண வைத்தியசாலைகளில் பத்து வருடங்களுக்குக் கடமையாற்ற நியமிக்கப்படவுள்ளனர்.

விண்ணப்பப் படிவங்களை அந்தந்தப் பிரிவுப் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் பெற்று ஏப்ரல் ஆறாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பம் தொடர்பான அறிவுறுத்தல்களைச் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் பார்வையிடலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)

# வறிய மாணவர்களுக்கு சமுர்த்தி வங்கிகளில் வைப்பு

தென்மராட்சி,ஏப்.1

தென்மராட்சிப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்நத 100 மாணவர்களுக்குப் பிரதேச சமுர்த்தி வங்கிகளில் ஒரு லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களின் பெயர்களில் வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புக்கணக்குப் புத்தகங்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 18ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்களுக்கு வங்கிக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டதுடன், கடந்த வருடம் நடைபெற்ற சமுர்த்திக் கொடி விற்பனையில் அதிகளவு நிதிசேகரித்த சமுர்ததி அபிவிருத்தி உத்தியோத்தகர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

சமுர்த்திக் கொடி விற்பனையின் போது சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி, வரணி ஆகிய வலயங்களைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தாரமிழந்தோர், கணவனால் கைவிடப்பட்ட குடும்பங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள், வலுவிழந்த மாணவர்கள் ஆகியோருக்கே தலா ஆயிரம் ரூபாவீதம் சமுர்த்தி வங்கிகளில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.(8-117-203)

# சுனாமி ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.1

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட சுனாமி ஓவியப் போட்டியில் தீவக வலயப் பாடசாலைகளின் மாணவர்கள் நால்வர் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பரிசுபெறும் மாணவர்களின் விவரம் வருமாறு:-

விசேட பரிசு: சி.விஸாணன் (புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), ர.மதுரன் (வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம்).

ஆறுதல் பரிசு: இ.சத்தியரூபா (வேலணை சேர் வை.து.ம.ம. வித்தி.), ரி.விஜிதரன் (வேலணை சேர் வை.து.ம.ம.வித்தி.).

(ஒ)

# தேநீருக்குள் மயக்கமருந்து கலந்து இருவரிடம் நூதனக் கொள்ளை

## கோண்டாவில், யாழ்.நகர்ப்பகுதிகளில் சம்பவம்

கோண்டாவில்,ஏப்.1

தேநீருக்குள் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்து ஆள்களை மயக்கி நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றை அபகரித்த சம்பவங்கள் இருவேறு இடங்களில் இடம்பெற்றுள்ளன.

இந்த இருவேறு சம்பவங்களில் கோண்டாவிலைச் சேர்ந்த க.வேலுப்பிள்ளை (வயது 65), த.ஜெயானந்தம் (வயது 60) ஆகியோர் உடல்நலப் பாதிப்புக்குள்ளானதோடு தாங்கள் அணிந்திருந்த தங்க நகைகளையும் பணத்தையும் இழந்துள்ளனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கடந்த சனிக்கிழமை திருநெல்வேலிப் பகுதியில் நின்றிருந்த க.வேலுப்பிள்ளை என்பவரை அணுகிய இருவர் நட்புடன் பழகுவது போல நடித்து அவரைத் தேநீர்க்கடைக்குள் அழைத்துச் சென்றனர். பின்னர் அங்குவைத்து அவருக்குப் போக்குக் காட்டிவிட்டு தேநீருககுள் மயக்கமருந்தைக் கலந்துகொடுத்தனர். குறித்த வயோதிபர் மயங்கிய பின்னர் அவர் அணிந்திருந்த 2 பவுண் அளவுடைய தங்க மோதிரத்தை அபகரித்துச் சென்றுள்ளனர். மயங்கிய நிலையில் இருந்த வயோதிபரை அவருடைய உறவினர்கள் வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்ப்பித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேபாணியிலான இன்னொரு சம்பவம் கடந்த 28ஆம் திகதி யாழ்நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் த.ஜெயானந்தம் என்பவர் தனது தங்கச் சங்கிலி, 2 மோதிரங்கள், பணம் என்பவற்றை இழந்துள்ளார். இவர்கள் இருவரும் சுமார் 10 மணித்தியாலயங்கள் வரையில் சுயநினைவின்றி மயக்க நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய மோசடிகளில் ஈடுபடுவோர் குறித்துப் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. (8-49)

# அடுத்த ஆண்டுக்கான பாடநூல்கள் மூன்றாம் தவணையில் விநியோகம்

வலி.தெற்கு,ஏப்.1

அடுத்த ஆண்டு பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்களை இவ்வருட மூன்றாம் தவணையின்போது பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாக அறியப்படுகிறது.

இதற்கென 2 கோடி 20 லட்சம் பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்படவுள்ளன. இப்புத்தகங்களை அச்சிடுவதற்கு 800 கோடி ரூபா செலவாகும் எனக் கல்வி அமைச்சு மதிப்பீடு செய்துள்ளது.

இப்பாடப்புத்தகங்கள் வலய, கோட்ட மட்டங்களூடாகப் பாடசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளையில், இரண்டாயிரத்து 500 புத்தகங்களுக்கு மேல் தேவைப்படும் பாடசாலைகளுக்கு அவற்றை நேரடியாக விநியோகிக்கவும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

(ஒ-152)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த நாகேஸ்வரி வேலுப்பிள்ளையாகிய எனது 477350259V இலக்க அடையாள அட்டை முகமாலைக்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செல்வி மஞ்சுளா, உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். (சி-41921)

## கடை விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதியில் தற்போது வியாபார ஸ்தாபனமாக இயங்கிக்கொண்டிருக்கும் கடை ஒன்று உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 - 222 - 2990, 0777 - 744863. (சி-41924)

## நாடகம் எழுதுவது எப்படி?

400 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் ஆராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எப்படி உருவாகினார் என்று அறியப் போகின்றீர்களா? அவரது "வானொலி நாடகம் எழுதுவது எப்படி?" என்ற நூலை வாசியுங்கள்! ரூ.150/= (43674)

## தேவை

அலுவலகம் ஒன்றிற்கு 800 சதுர அடி பரப்பிற்குக் குறையாத கட்டடம்/ வீடு பலாலி வீதி, திருநெல்வேலியில் தேவை. தொடர்பு: 077 6351871, 071 4840351.

(43631)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், வர்த்தக மணமகனுக்கு சுத்தபோசன 35 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. வேலாயுதபிள்ளை J.P. இல.10, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(43701)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க்குற்றமற்ற பட்டதாரி அரச அதிகாரிக்கு (வயது29), அரச உத்தியோகம் பார்க்கும் அழகான, நற்குணமுள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சீதனம் எதிர்பார்க்கப்படும். தொடர்பு:விள. இல.2543, மே/பா உதயன்.

(43708)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம், வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமண மாலை, இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207.

(43302)

# மோட்டார் சைக்கிள் தடம் புரண்டதில் மூவர் காயம்!

தென்மராட்சி,ஏப்.1

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்துக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் மோட்டார் சைக்கிள் தடம்புரண்டு கம்பத்துடன் மோதியதில் முட்சுருட்கம்பி மேல் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தனர்.

கடந்த திங்கட்கிழமை மட்டுவில் ஆயத்தடிப் பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றது.

இவ்விபத்தில் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த மகாதேவா கிஷோக்குமார் (வயது20), இராசையா வாசன் (வயது 20), நீர்வேலி சிறுப்பிட்டி கிழக்கைச் சேர்ந்த சண்முகம் யோகச்சந்திரன் (வயது24) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். காயமடைந்த மூவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ஒ-117)

### உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள்

அரியாலை,ஏப்.1

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய இயக்குநர் சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தலைவராக சி.கணபதிப்பிள்ளை, உப தலைவராக க.இரத்தினம், இயக்குநர்களாக க.நாகலிங்கம், பொ.குணசிங்கம், பொ.குகதாஸ், வெ.தர்மகுலசிங்கம், செல்வி சி.கவிதா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (8-17)

# சட்டவிரோத மின்பாவனை; இருவருக்கு அபராதம் விதிப்பு!

குடத்தனை,ஏப்.1

பருத்தித்துறைப் பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற இருவருக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் தலா 20 ஆயிரம் ரூபா குற்றப் பணமாக அறவிட்டதோடு, அவர்கள் மின் இணைப்பிற்குப் பயன்படுத்திய உபகரணங்களைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

பருத்தித்துறைப் பொலீஸாரும் இலங்கை மின்சாரசபை பருத்தித்துறை அலுவலகத்தினரும் இணைந்து இரவுநேரம் மேற்கொண்ட திடீர் சோதனையின்போதே இவர்கள் சிக்கிக்கொண்டனர்.

பருத்தித்துறை மாதனையைச் சேர்ந்த பரராஜசிங்கம் மயூரி, புலோலி வடக்கு உத்திராவத்தையைச் சேர்ந்த கோ.இராசலிங்கம் ஆகியோருக்கே குற்றப்பணம் அறிவிடப்பட்டது. (8-78)

# மீனவருக்கு உபகரண உதவி

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு குடத்தனை வடக்கு, பொற்பதி, நாகர்கோயில் நாகதம்பிரான் முகாம் ஆகியவற்றில் தங்கியுள்ள 137 குடும்பங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்களைத் தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண ஆதீனம் குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையின் ஊடாக வழங்கியுள்ளது. (8-78)

# INVITATION

Parents, Past Pupils and Well wishers are invited to our Junior School Sports meet today 1st of April, 2005 at 2.00 p.m.

Principal, Staff & Students
(C/41926)(26-14) Uduvil Girls' College.

# பாராட்டி வாழ்த்துகிறோம்



கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கடந்த 31.01.2005 ஆம் திகதி திங்கட்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் கலைமாணி (B.A.) பட்டம் பெற்றுக் கௌரவிக்கப்பட்ட

**றொபின்** என அழைக்கப்படும்

**சுரேஸ்கரன்**

என்பவர் ஆரம்பக் கல்வியை யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை யாழ். மத்திய கல்லூரியிலும் பயின்று வந்தார். இக்காலத் தில் நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி என்பவற்றில் பங்குபற்றிப் பரிசில்களும் பாராட்டுக்களும் பெற்றுள்ளார். யாழ். மத்திய கிரிக்கெட் அணியின் சிறந்த பந்து வீச்சாளராகவும் விளங்கினார்.

தமது இளைய பரம்பரையினருக்குதவும் முகமாக புலமைப் பரீட்சைக்கான வினாவிடைகளையும் உயர்தரங்களுக்கான கட்டுரைகள் சிலவற்றையும் தமது சொந்தப் பெயரிலும் மனோ சுரேஸ் என்னும் புனை பெயரிலும் தினக்குரல், வீரகேசரி ஆகிய நாளிதழ்களில் எழுதிவந்தார். புதுக்கவிதை புனைவதிலும் வல்லவர். கொழும்பு பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டார். அண்மையில் கொ/பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியராகவும் நியமனம் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் நாவலர் வீதி றெயில்வே கடவைக்கு அண்மையில் வசித்துவரும் **திருவாளர் வ.மனோகரன் - பத்மாவதியின்** செல்வப் புதல்வனாவார்.

**இவரைப்பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.**

**க.மோகனரூபன்,**
**அமைப்பாளர்,**
**வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க பொது உத்தியோகத்தர் சங்கம்,**
(43700)(24-14-26) **674, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

# ஆசிரிய ஆலோசகர் [வழிகாட்டல் ஆலோசனை, விசேட கல்வி] கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் [ஆரம்பக்கல்வி] நியமனம்

## வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்

வழிகாட்டல் ஆலோசனைச் சேவை விசேட கல்வி போன்ற விடயங்களுக்கான ஆசிரியர் ஆலோசகர்களுக்கான நியமனங்கள், கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) வெற்றிடம் நிரப்புதல் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வழிகாட்டல் ஆலோசனை**

ஆசிரிய ஆலோசகர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் இவ்விடயத்தில் அரச / அரச சார்பற்ற நிறுவனங்களில் 04 மாதங்களுக்குக் குறையாத பயிற்சி பெற்றவராகவோ அல்லது பட்டப்படிப்பில் உளவியல் /வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை ஒரு பாடமாகப் பயின்றவராகவோ இருத்தல் வேண்டும்.

**விசேட கல்வி**

ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் மாகாணக் கல்வித் திணைக்களம்/ தேசிய கல்வி நிறுவகம்/கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட விசேட கல்விப் பயிற்சியைப் பெற்றவராகவும் இருத்தல் அவசியம்.

கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) வெற்றிடத்திற்கு பாடசாலையில் கடமைபுரியும் இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2:1ஐச் சேர்ந்தவர்கள் தமது சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் 08-04-2005ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக *'வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்'* எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**வே.தி.செல்வரத்தினம்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.** (C/41907)(46-14-15-26)

# உடனடி வேலைவாய்ப்பு

எமது கம்பனிக்கு அனுபவமுள்ள ELECTRICIAN/ REFRIGERATION TECHNICIAN உடன் தேவை.
நேரில் சமுகமளிக்கவும்.

**புறோமோட்டேர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிடெட்,**
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-41901)(26-14-15) T.P.: 021 - 222 - 5780.



# மணிவிழாக் காணும் சிவத்திரு. வ. குமாரசாமி ஐயா அவர்களின் பாராட்டு நிகழ்வு

சைவ உலகிற்கு அளப்பரிய சேவை செய்து 60 ஆவது வயதைப் பூர்த்தி செய்யும் *சிவத்திரு.* வ.குமாரசாமி ஐயா அவர்களின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பேரவையினால் முன்னெடுக்கப்படுகிறது.

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்: 03-04-2005 ஞாயிறு முற்பகல் 9.30 மணி
வரவேற்புரை: செல்வி கனகசுந்தரம்பிள்ளை சசிலேகா *அவர்கள்*
ஆசியுரை:
- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள
- ஞானபண்டித, அமுதசுரபி, அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்கள்
- சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர் (போஷகர், சந்நிதியான் ஆச்சிரம சை.க.ப.பேரவை)

வாழ்த்துரை:
- ஞானபண்டித சேவாசுரபி Dr.சி.கதிரவேற்பிள்ளை அவர்கள்
- சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் அவர்கள்
- ஆசிரியர் ஆ.சிவநாதன அவர்கள்

☆ விழாநாயகன் உணர்வலைகள் -

அன்று காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து ஆலயத்திலிருந்து விழாநாயகன் ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்.


விழா நாயகனைப் பாராட்ட விரும்பும் அன்பர்கள் பேரவையுடன் தொடர்புகொள்ளவும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

செல்வச்சந்நிதி. **சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை**
தொண்டைமானாறு. **பண்பாட்டுப் பேரவை.**
(சி-41886)(26-14-15)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1949 - 09 - 13



விண்ணில் 2005 - 03 - 02

**அமரர் சிதம்பரி சின்னத்துரை**

புவி மீது எம்மைப் புகழோடு வாழவைத்து
பூவுலகம் சென்றுவிட்ட - தெய்வமே!
காலனவன் உனைப்பறித்து - மாதமொன்றானாலும்
எம் மனமெல்லாம் உன்நினைவு மாறாது இருக்குமப்பா!

இயற்றாலை,
வரணி. (43713)(26-14-15) - **குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணகம் 08 - 05 - 1929



விண்ணகம் 02 - 03 - 2005

**திருமதி பொன்னுத்துரை புஸ்பராணி**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எமது வளமான வாழ்க்கைக்கு நல்வழி காட்டி
எம்மை நல்வாழ்வு வாழ வைத்த எம் அன்புத் தெய்வமே!
உங்கள் பாசமிகு நினைவுகள் என்றும்
எம்மை விட்டு நீங்காது அம்மா!
தாயே உங்கள் ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இல.39, சோமசுந்தரம் அவனியு,
யாழ்ப்பாணம்.
T.P. 222 3858 (43694)(21-14-15-26) - **குடும்பத்தினர்.**

# 30
# பில்லியன்
# ஆயுட் காப்புறுதி
# நிதி!

எக் காலத்திலாவது இது வெல்லப்பட முடியுமா?

ஸ்ரீ லங்கா இன்ஷ்வரன்ஸ்

**எமது தலைமைத்துவம்**
**எக் காலத்திலும் வெல்லப்பட முடியாதது!**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் பொன்னம்பலம் சின்னத்துரை

(உரிமையாளர், கபிலா காலனியகம், யாழ்ப்பாணம்)

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாயிருந்தவரே
ஆதரவாயிருந்து அன்பு மொழி பேசியவரே
இன்று எமைப்பிரிந்து முப்பத்தொரு நாளானாலும்
உமது அன்புருவம் மறக்கவேமுடியாது!
என்றும் எங்கள் இதயத்தினில் இருந்தே ஒளி வீசி
நல் வழிகாட்டியே நம்மை வழி நடத்திடுவீர் !
ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல முருகன்
நல்லைக்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம் !

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் 30.03.2005 புதன்கிழமை நடைபெற்றன. இன்று (01.04.2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

209, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(C/41874)(50-14-11)

# கிராமப்புறப் பெண்கள் மீதே மிகு மோசமான வன்முறைகள்

**பெண்** என்பவள் போகப்பொருளாகப் பார்க்கப்படும் வரை பெண்களுக்கெதிரான வன்முறைகளும் அடக்குமுறைகளும் தொடரவே செய்யும். பெண்கள் கணனி உலகத்திலும் சரி, வான்வெளி யுகத்திலும் சரி பெண்ணானவள் அளப்பரிய சாதனைகளை நிலைநாட்டினாலும், பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இந்நிலையானது பெரும்பாலும் கிராம மட்டங்களில் அதிகரித்து வருகின்ற பெரும் நெருக்கீடான விடயமாகப் பெரிதும் நம்பப்படுகின்றது.

இந்நிலைமையானது ஏற்படக் காரணம் மூடநம்பிக்கைகள், கல்வி அறிவு பின்தங்கியுள்ளமை, 'ஆண்மை' எனப்படுகின்ற வீரம், அதிகாரம், அடக்கியாளும் திறன், யுத்த சூழ்நிலைகள், குடும்பப்பின்னணிகள், வெளிநாட்டு நாகரிகம் போன்றவற்றுக்குப் பெண்கள் பெரிதும் பணயக்கருவிகளாகக் காணப்படுகின்றமை ஆகும். மனித உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிட்டபடி பெண் என்பவள் ஆணைப் போலவே சம அந்தஸ்துடையவள் என்பது சரீர ரீதியாக மட்டுமன்றி, சமூக ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்படும் போதுதான் பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்படும். எமது சமூகத்தில், பொதுவாகக் கிராம மட்டங்களில் ஆண்குழந்தை பிறந்தால் கொடுக்கப்படுகின்ற வரவேற்பு பெண் குழந்தைகள் பிறக்கப்படும்போது கொடுக்கப்படுவதில்லை. குறிப்பாக, இந்தியாவில் சில சமூகங்களில் பெண் சிசுக்களைக் கொல்வதும, கவனிக்காமல் விடுவதும் இன்னமும் நடந்து கொண்டிருக்கின்றன.

பெண்களுக்கெதிரான வன்முறைகளாக, குறிப்பாகக் கிராமப்புறங்களில் பாலியல் அடாவடித்தனங்கள், பெண் கொலைகள், மோசடிகள், வீட்டு வன்முறைகளுக்கு உட்படுத்தல், அடிமைகளாகப் பயன்படுத்தல், அடித்தல், துன்புறுத்தல் போன்ற பெண்களுக்கெதிரான வன்முறைகள் காணப்படுகின்றன. பெண்களுக்கெதிரான பாலியல் பலாத்காரமானது அரசாண்ட காலத்திலிருந்து ஜனநாயக ஆட்சிக்காலம் வரை பெண்மீது மேற்கொள்ளப்படுகின்ற மோசமான வன்முறையாகும். எந்த ஒரு வயது வந்த பெண்ணும் தனியாகவோ - குழுவாகவோ, பயணங்களின் போதோ பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உட்படுவது மிகச் சாதாரணமாகிவிட்டது. பெண் தனியிடங்களில் போகும்போது ஆணினால் - ஆண்குழு ஒன்றினால் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவதுடன், எந்தத் தொழிலில் ஈடுபடுபவராயினும் அவர் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் பிற்போக்கான சமூகமாக உருவெடுக்கிறது.

பெண்கள் வீடுகளில் துன்புறுத்தப்படுவது மிகப் பொதுவான ஒரு பிரச்சினை ஆகும். பொருளாதார நிலையில் மேம்பட்ட - கல்வியறிவு பெற்ற - குடும்பங்களில் ஓரளவு குறைவாகக் காணப்பட்டாலும், இவை கிராமப் புறங்களில் வாழும் பெண்கள் நாள்தோறும் துன்புறுத்தலுக்கு ஆளாகி வருகிறார்கள். துன்புறுத்துபவர் அநேகமான ஆண், அதுவும் கணவனாக இனங்காணப்படுகிறார். துன்புறுத்தலுக்குள்ளாவதன் மூலம் பெண்ணில் உடல் மட்டுமன்றி உளநலமும் கெட்டுப் போகிறது.

கிராமப்புறங்களில் இவ்வாறு பெண்கள் அநேகமாகப் பாதிக்கப்படுவதற்குக் காரணம் வலுவிற்கு அடிமையான கணவர், கல்வியறிவு அற்ற - குறைந்த கணவரும் மனைவியும் வறுமைக்கோட்டின் கீழான பொருளாதார நிலைமை, சுயதொழில் இல்லாத பெண்கள், சீதனப் பிரச்சினை போன்ற காரணிகளால் ஆணை நிதானிக்கவிடாமல் பெண்ணை எப்போதும் அடக்கி, தனது அதிகாரத்தை எப்போதும் நிரூபிக்க வேண்டும் என்ற நிலைக்குத் தூண்டுகிறது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு நியாயம் கேட்கப்போகும்போது பெண்கள் சமூகத்தினால் பழிக்கப்படுதல், மேலும் அடக்கி ஆளப்படுதல் போன்றவற்றால் கனலும் நெருப்பைச் சுமந்து நிற்கும் எரிமலை போன்ற பெண்ணானவள் தினம் வஞ்சிக்கப்படுகிறாள்.

இவ்வாறான பெண்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவதுடன், சமூகத்தினரால் புறக்கணிக்கப்பட்டு, உடல்ரீதியான நோய்களும் ஏற்பட்டு, சில பெண்கள் தற்கொலை முயற்சியையும் மேற்கொள்கின்றனர்.

பெண்களுக்கெதிரான பிரதானமான வன்முறையாகத் தற்போது 'கற்பழிப்பு' எனும் காரச செயல் இடம்பெறுகிறது. இது கிராம மட்டங்களில் மிகவும் மலிந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. எனினும், வளர்ச்சியடைந்த பிரதேசங்களிலும் பெரிதும் இக்கொடூரம் பெண்களுக்கெதிராகத் தாண்டவம் ஆடுகிறது. யுத்த காலத்தில் ஏராளமான பெண்கள் காணாமற் போயும் கற்பழிக்கப்பட்டும், கொலை செய்யப்பட்ட வன்முறைகள் அரங்கேறியுள்ளன. எமது பிரதேசத்திலும் குறிப்பாக கிருஷாந்தி, சாரதாம்பாள் போன்றவர்கள் இக்கொடூரமான வன்முறைக்கு ஆளாகியுள்ளனர்.

வெளி உலகிற்குச் சென்றால் அங்கும் சரி, கிராமப்புறப் பிரதேசங்களிலும் சரி, நகர்ப்புறங்களிலும் சரி குறிப்பாக, இந்தியா போன்ற நாடுகளில் கணவர்மார் தமது மனைவிமாரை ஒரு பணயப்பொருளாக வைத்துப் பெண்களை வற்புறுத்தி வன்முறைக்குட்படுத்திப் பெண்களை மிகவும் கொடூரமாகப் பயன்படுத்துகின்றனர்.




பாடசாலைகளிலும் சரி, வேறு இடங்களிலும் சரி "வேலியே பயிரை மேய்வது" போன்று ஆசிரியர்களாலும் காலங்காலமாகப் பெண்களை வன்முறைக்குட்படுத்தி பின் கொலை செய்த சம்பவங்களும் நடைபெற்றுவருகின்றன. திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி மயூரணி கொலை செய்யப்பட்டமை, கொள்ளைக்காகப் பெண்களைக் கொலைசெய்தும், பொருள்களை அபகரித்துச் செல்லல் போன்ற கொலைச் சம்பவங்களும் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களாக அதிகரிக்கின்றன.

**இராசரத்தினம் - வசீகரன்**
உடுப்பிட்டி

அயர்லாந்தில் 3100 பெண்களிடம் 'பசதி' என்ற அமைப்பு ஆய்வு நடத்தியது. இதில் 42 சதவீதத்தினர் பாலியல் ரீதியாக வஞ்சிக்கப்பட்டுள்ளனர். 10 சதவீதமான பெண்கள் வலலுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இது ஐரோப்பிய நாடொன்றின் நிலை என்றால், கிராமப்புறப் பெண்களின் நிலை என்ன?

கிராமப்புறங்களில் வீட்டு வறுமை காரணமாகப் பெண்களை வேலைக்கமர்த்துகின்றனர். எனவே, வேலைத்தளங்களில் பயணங்களின் போது பெண்ணானவள் மிகவும் பாதிக்கப்படுகிறாள். அத்துடன், இவர்களின் வாழ்க்கைத் தரமானது பின்தங்கியிருப்பதால், வேலைவாய்ப்பைத்தேடி அலைகின்றனர் இவ்வாறானவர்களில் சிலர் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புத் தேடிச் செல்கின்றனர். குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளில் இவ்வாறான வன்முறைகள் அதிகம் காணப்படுகின்றன.

இவர்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லும் முகவர்கள் பெண்களை ஒரு விபச்சார நிலைய முதலாளியிடமோ அல்லது கோடீஸ்வரரிடமோ பெண்களை விற்கின்றனர். அங்கு பெண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுததப்படுவதுடன், அடி உதைகளுக்கும் உட்படுகிறாள். உண்ண உணவின்றி, உடையின்றிப் பரிதவிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றாள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெண் கொலைகளும் அரங்கேறுகின்றன.

கிராமப்புற மக்களிடையே சமயம், சாஸ்திரம் போன்றவற்றிலும் அதீதநம்பிக்கை காணப்படுகின்றது. ஏனையவர்கள் நம்பிக்கை இருப்பினும் இவர்களிடையே பிற்போக்கான நிலைமைகள் காணப்படுவதால், ஏராளமான பெண்கள் இதுபோன்ற போலியான சாஸ்திரிகளிடமும் போலி குருமார்களிடமும் தம்மையே இழந்து வாழ்க்கையை இழக்கின்றனர். அண்மையில் கொழும்பில் கைதுசெய்யப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த போலிச்சாமியார் ஏராளமான பெண்களிடம் தவறாக நடந்து வன்முறைக்கு உட்படுத்தியிருக்கின்றார்.

இவ்வாறாக, கிராமப்புறங்களிலும் சரி நகர்ப்புறங்களிலும் சரி ஏராளமாகப் பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு கிராமப்புறங்களிலும் இரு பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பெரும் வன்முறையாகக் காணப்படுகின்றது.

எது எவ்வாறோ இது சம்பந்தமாக உரிய அதிகாரிகள் தலையிட்டு இது தொடர்பாக நடவடிக்கைகளை நடத்தாவிடின் பெண்கள் அடங்கிவாழும் சமூகமாகவே காணப்படுவர். பெண்ணாய்ப் பிறந்தவள் என்ன தவறு செய்தாள்? ★

## அவளுக்காக!

என்னவளே..
பெண்ணாய் பிறந்தென்ன
பாவமா செய்தாய்?
சாபங்களைச் சுமக்க
சிந்தித்துப் பார்...
அடி மனதில் அமிழ்ந்துள்ள
ஏக்கங்களினை
தொட்டுப்பார்...!
அவை ஒவ்வொன்றும்
வெளிவரத் துடிப்பதை
உணர்வாய்....
முடிந்துபோனதாய்
நீ நினைக்கும்
அத்தியாயங்களினைப்
புரட்டிப்பார்....!
மாற்றி எழுதப்பட
வேண்டியதை அறிவாய்!
கொஞ்சம் நினைத்துப்பார்...!
மேடை நாடகமல்ல
நம் வாழ்க்கை
ஒரு முறை ஒத்திகை
பார்க்க...
உண்மையாக
வாழப்படவேண்டியது
புரிந்துகொண்டால்
நாளை என்பதை
நகர்த்திவிட்டு
புறப்படு இன்றே
வானமும் உன் காலடியில்
வசப்படும் இனிதாய்....!

## மு ழி வு

பாவமாய்ப் பிறந்துவிட்ட பெண்பிள்ளை
பாசத்தைப் பகிரச் சொல்லி
பகீரதப் பிரயத்தனம் செய்தது
'உனக்கில்லையடி ~ உன்
சோதரனுக்கு மட்டுமே' என்கிறது
பண்பற்ற சமூகம்
'பாசாங்காயாவது
சிறிதளவு கிடையாதா? ~ என்ற
பல முறை இரங்கலின் விளைவாக
சமூகம் ஓர் முடிவிற்கு வந்தது
'நேசங்கள் பகிரப்படக் கூடாதவை
ஆண் மகவிற்கு மட்டுமே
கொடுக்கப்படக் கூடியவை' ~ இது
சமூகத்தின் மாற்ற முடியாத
தீர்க்கமான முடிவாகும்.

- நிரா



## சந்தியாவின் கடிதங்கள்

**பிரியமுள்ள பிரியாவிற்கு,**

உன் பிரியமான கடிதம் கிடைத்தது. பெண்களுக்கு மிகவும் பயன் தரக்கூடிய விடயங்களைக் குறிப்பிட்டிருந்தாய். அது மிகவும் பயனுள்ளதும் பாராட்டக்கூடியதும்.

சென்ற கடிதத்தில் தாழ்வு மனப்பான்மை பற்றிக் குறிப்பிட்டு அதற்குப் பரிகாரம் எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தேன்.

சென்றவாரம் பெண்கள் பண்பாட்டு மையம் நடத்திய அரங்காலயம் நிகழ்வில் பங்குபற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அது ஒரு வித்தியாசமான அனுபவம். நான் சென்ற கடிதத்தில் குறிப்பிட்ட பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய களமாக இந்த அரங்காலயம் திகழ்கின்றது.

நான் என் தாழ்வு மனப்பான்மையைத் தீர்த்துக்கொள்ளக் கையாண்ட வழியையே இந்த அரங்காலயமும் நடைமுறைப்படுத்துகின்றது.

முதலில் நாம் மனம் விட்டுப் பேச வேண்டும். நம் மன ஆழத்தில் புதைந்துள்ள சோகங்கள், ஏக்கங்கள் என்பவற்றை வெளிக்கொணர வேண்டும். எம்மனதில் அவை அழுத்தி நிற்பதாலேயே மனம்பாரம் ஏற்பட்டுத் தவிக்கின்றோம். அதன் மூலம் எம்மை நாமே அழுத்துகின்றோம்.

நான் ஒருவரிடம் என் பிரச்சினையை வெளிப்படுத்தும்போது அது நூறு பேருக்குத் தெரியவருகின்றதே?

இதை நானும் அனுபவித்தவள்தான். ஒருசிறு பிரச்சினையை நான் யாரிடமாவது சொன்னதும் அது நூறு பேருக்குப் பரவுகின்றது. அந்தச் சிறுபிரச்சினையும் கண், காது, மூக்கு வைத்துப் பேசப்படுகின்றது. இதனால் நான் மேலும் பல பிரச்சினைகளை எதிர்கொண்டேன்.

அப்படியானால் ஏன் பிரச்சினையை யாரிடமாவது, வெளிப்படுத்த வேண்டும் என்று சொல்கின்றேன் என்பது தானே உன் கேள்வி?

முதலில் நம்மைப் புரிந்து கொண்ட, உண்மையான, தெளிவுள்ள நாம் ஏற்றுக்கொள்ளும் நண்பன் - நண்பியைத் தெரிவுசெய்யவேண்டும். நண்பன் - நண்பி என்பது நம்முடன் கூடப்படிக்கும் அல்லது வேலை செய்யும் நபர்களை மட்டும் குறிப்பதல்ல.

அது யாராக வேனும் இருக்கலாம். நம் பெற்றோராக - சகோதரர்களாக - நம்மில் நட்புக்கொள்ளும் யாராகவேனும் இருக்கலாம். இவர்களில் நாம் தெரிவு செய்யும் நபர் நிச்சயம் நம் நலனில் அக்கறை கொண்டவராகவே இருக்க வேண்டும்.

நாம் தேர்வு செய்த நண்பன் - நண்பியிடம் எம் உள்ளத்தில் புதையுண்ட ஏக்கங்கள், சோகங்கள் என்பவற்றை வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் எம்மை அழுத்தித் தாக்கத்தை உண்டு பண்ணும் மன அழுத்தம் மறையலாம். இதனால் எமது தாழ்வு மனப்பாங்கு மாறலாம்.

இந்த முறையை நானும் கைக்கொண்டேன். ஒருசிறந்த என்னைப் புரிந்துகொண்ட நண்பி எனக்குக் கிடைத்தாள். அவளிடம் என் பிரச்சினைகளை வெளிப்படுத்தினேன். அவள் ஒரு சிறந்த ஆலோசகியாகச் செயற்பட்டாள் அதன் மூலம் நான் தெளிந்தேன்.

அரங்காலயத்தில் நான் கண்ட இன்னொரு விடயம் பங்குபற்றல் மூலம் தெளிவு பெறல். 'பங்குபற்றல்' என்பது ஒதுக்குதல் முதல் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்வதைத் தவிர்த்தல் ஆகும்.

எந்த ஒரு விடயத்தையும் செய்வதற்கு முன்வரவேண்டும். என்னால் முடியாது என்பதை மாற்றி முயன்று பார்ப்போம். இயலுமானதைச் செய்வோம் என முன்வரவேண்டும். அரங்காலயத்திலும் நான் இதையே கண்டேன். இதற்கு அவர்கள் கைக்கொண்ட முறை தாளத்துக்கு ஆடுவது.

வாத்தியங்கள் இசைக்கும் போது அனைவரும் தம் இயல்புக்கேற்பத் தன் மனதில் தோன்றும் விதத்தில் ஆடினர். பலர் ஒதுங்கி நின்ற போதும் படிப்படியாக ஆடியவர்களுடன் இணைந்து கொண்டதையும் அவதானிக்க முடிந்தது.

எனவே, பிரியா தாழ்வு மனப்பான்மையைப் போக்குவதற்கு நான் கூறும் ஆலோசனைகள் இரண்டு. ஒன்று மனம் விட்டுப் பேசுதல், மற்றையது பங்குபற்றல்.

அடுத்த கடிதத்தில் தொடரும் வரை...

24-03-2005

பிரியமுடன் சந்தியா.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்வன்

## கந்தசாமி துஷ்யந்த் (துஷி)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 27.04.1984 | 11.04.2004 |


திதி: ஸப்தமி 01.04.2005

எங்கள் துஷி !
காலவிதிப்பின் ஓட்டத்தில் - கழிந்தது ஒரு வருடம்
இன்றைய விடியலின் பொழுதிலும்
உன் வரவே எங்களின் எதிர்பார்ப்பு
அன்புத் துஷி!
அன்பு என்பதை
அன்பு இல்லாதவருக்குச் சொல்ல நினைத்தாயே
சூடிக்கொள்ள நினைத்தமலர் - இங்கே
சூட நினைத்தவன் நட்சத்திரப் பூவாய் - அங்கே
வாழ்க்கையின் வசந்தங்களை - உனக்காய்
நாம் சேர்த்தோம்.
எங்களின் வசந்த கால சோலையே
உன்னை ஏன்
சருகாக உதிர்த்தார்கள்?
காலம் தான் கடக்கிறது - எனினும்
காரணங்கள் கரைந்து போகாது.
உனக்காய் வாழும் இதயங்கள்
உறுதியாய் இன்னும்
உனக்காகவே ஏங்குகின்றன.
புன்னகை நிறைந்த பூவுலகில்
புதிதாய் வருவாய் என்ற நம்பிக்கையோடு.
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

(43679) (54-14-34)

29/29,தேவாலய ஒழுங்கை,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

தாய்,தந்தை,சகோதரர்கள்,
மற்றும் உறவினர்.


கோபம் வந்தால் என்ன பேசுகிறோம் என்று
நாம் நினைத்துப் பார்ப்பதில்லை.
வார்த்தைகள் கத்திபோல மனதைக் காயப்படுத்தும்
காயங்கள் ஆறாத புண்களாக மாறும்.

**நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே!**
**வாழ்க்கை இனிமையாக வாழ்வதற்கே!**
**சித்திரவதைப் படுவதற்கு அல்ல!**

**உங்களால் மற்றொருவர் மனம்**
**சித்திரவதைப் பட்டுத் துன்பப்படுகிறதா என்பதை**
**யோசித்துப் பாருங்கள்.**
**வன்முறைகள் இல்லாத இல்லத்தை உருவாக்க**
**நீங்களும் உதவுங்கள்**

**இல்லத்து வன்முறைகளை**
**இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்.**

THOMPSON ASSOCIATES

எச்சரிக்கை: வார்த்தைகள் அபாயகரமானவை.
அவதானமாய்க் கையாளுங்கள்.

நாம் இணைந்து
பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்போம்

பெண்கள் மீதான
வன்முறைகளை இல்லாதொழிக்கும்
இலங்கைப் பிரசாரத்திட்டம்
த.பெ. 2006, கொழும்பு.

## படையணிகளுக்கு இடையிலான

# எல்லே போட்டியில் காலாட்படை வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையணிகளுக்கு இடையில் நடந்த எல்லே சுற்றுப் போட்டியில் 6ஆவது காலாட் படைப்பிரிவு வெற்றிபெற்று வெற்றிக் கேடயத்தைப் பெற்றது.

படையணிகளுக்கு இடையில் நடந்த ஆட்டங்களில் இறுதி ஆட்டத்துக்குத் தெரிவான 11ஆவது சிங்க படையணியும் 6ஆவது காலாட் படையணியும் கடந்த திங்கட்கிழமை நீர்வேலி குளக்கரைத் திடலில் மோதின.

இந்த ஆட்டத்தில் காலாட்படையணி 9:4 என்ற புள்ளியடிப்படையில் வெற்றிபெற்றது.

வெற்றிபெற்ற அணிக்கு 512 ஆவது படையணியின் தளபதி கேணல் ரணசிங்க கேடயத்தை வழங்கினார்.

சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்ட காலாட் படையைச் சேர்ந்த சார்ஜன்ட் சந்தனவுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது.

யூனியன் இன்யூரன்ஸின் முகாமையாளர் ஜுட் பிளேவியனும் இந்த நிகழ்வில் கலந்து வெற்றிக் கேடயம் ஒன்றை வழங்கினார். (3)

# எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம்: பலமான அணிகள் இன்று மோதுகின்றன

யாழ்ப்பாணம்,ஏப்.1

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் உதயனின் ஊடக அனுசரணையுடன் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்றைய ஆட்டங்களில் பலமான அணிகள் மோதுகின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 4 மணி - சென்.சேவியர் வி.க. எதிர் கல்வளை விநாயகர் வி.க.

★ மாலை 5 மணி பொமேர்ஸ் வி.க.எதிர் யூனியன் வி.க. (3-86)




யாழ். சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. அப்போது பிரதம விருந்தினரான யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.வரதராஜா, சிறப்பு விருந்தினர் குருநகர் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத் தந்தை அருட்திரு. சா.ஜஸ்ரின் அடிகளார், வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் ஆகியோர் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை எற்றுக்கொள்கின்றனர். *(படம் : குருநகர் செய்தியாளர்)*

# நெடுந்தீவு மெய்வன்மை போட்டி சென்.ஜோன்ஸ் வி.க.சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.1

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் சென்.ஜோன்ஸ் வி.க., சம்பியனானது.

கழகங்களுக்கிடையில் நடைபெற்ற மெய்வன்மை மற்றும் குழுநிலைப் போட்டிகளில் 74 புள்ளிகளைப் பெற்றே சென்.ஜோன்ஸ் கழகம் சம்பியனானது.

சென்.அன்ரனீஸ் வி.க. 57 புள்ளிகளையும் உதயசூரியன் வி.க. 34 புள்ளிகளையும் பெற்று 2ஆம், 3ஆம் இடங்களுக்கு வந்தன.

குழுநிலைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**துடுப்பாட்டம்**

ஆண்கள் - அன்ரனீஸ் வி.கழகம், சென். ஜோன்ஸ் வி.கழகம்

பெண்கள் - சென்.ஜோன்ஸ் வி.கழகம், உதயசூரியன் வி.கழகம்.

**கரபந்தாட்டம்**

ஆண்கள் - சென்.அன்ரனீஸ் வி.கழகம், ஸ்ரார் வி.கழகம்.

பெண்கள் - உதயசூரியன் வி.கழகம், சென்.ஜோன்ஸ் வி.கழகம்.

**எல்லே**

ஆண்கள் - சென்.அன்ரனீஸ் வி.கழகம், சென்.ஜோன்ஸ் வி.கழகம்.

பெண்கள் - உதயசூரியன் வி.கழகம், ஸ்ரார் வி.கழகம்.

**கபடி**

ஆண்கள் - சென்.அன்ரனீஸ் வி.கழகம், சென்.ஜோன்ஸ் வி.கழகம்.

பெண்கள் - ஸ்ரார் வி.கழகம், சென்.ஜோனஸ் வி.கழகம்.

**உதைபந்தாட்டம்**

சென்.ஜோன்ஸ் வி.கழகம், ஸ்ரார் வி.கழகம்.

**வலைபந்தாட்டம்**

சென்.ஜோன்ஸ் வி.கழகம், 'சென்.அன்ரனீஸ் வி.கழகம்.

(3-86)

# கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

அரியாலை 86 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு மாவட்ட மட்ட அணிகளுக்கு இடையே மின்னொளியிலான கரபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக் கிழமை இரவு 8 மணியளவில் அரியாலை அருணோதயா சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு 7 மணி - கோப்பாய் ஐக்கிய வி.க. எதிர் அரியாலை ஐக்கிய வி.க.(பி)

இரவு 8 மணி பாரதி வி.க. எதிர் மட்டுவில் மோகனதாஸ் வி.க. (ஒ-190)

# வலைப்பந்தாட்டம்

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம், பாடசாலை இன்றறக்ட் மாவட்ட றோட்டறக்ட் கழகங்களுக்கிடையிலான வருடாந்த வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பிக்க விரும்பும் கழகங்கள் தமது விண்ணப்பப் படிவங்களைப் பாடசாலை அதிபர் அல்லது கழகப் பொறுப்பாசிரியர் ஊடாக எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# நாடாக் - 100 டெனிஸ் போட்டி; வீனஸ், ஷரபோவா அரையிறுதியில்!

அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் நாடாக் 100 பகிரங்க டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது.

இப்போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை எதிர்த்து விளையாட உள்ளார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்க வீரர் அகாஷி 7:6, 6:2 என்ற நேர் செற்டில் காஸ்டன் காடியோவை (ஆர்ஜென்ரீனா) தோற்கடித்து கால் இறுதிக்கு தகுதி பெற்றார். இன்னோர் ஆட்டத்தில் முதல் நிலை வீரர் ரோஜர் பெடரெர்(சுவிற்ஸர்லாந்து) 6:3, 4:6, 6:4 என்ற செற் கணக்கில் மரியா ஆன்சிச்சை(குரோஷியா) தோற்கடித்து கால் இறுதிக்குத் தகுதி பெற்றார். மற்றும் தாமஸ் ஜோகன்சன்(சுவீடன்), ரபெல் நாடல் (ஸ்பெய்ன்), டேவிட் பெரெர் ஆகியோரும் கால் இறுதிக்குள் நுழைந்துள்ளனர்.

ஆண்கள் இரட்டையர் பிரிவில் 2ஆவது சுற்று ஆட்டத்தில் மகேஷ்பூபதி(இந்தியா), - டுட் உட்பிரிஜ்(ஆஸ்திரேலியா) ஜோடி 6:3, 6:4 என்ற நேர் செற்றில் அமெரிக்காவின் ஒலிவர் டிரோவிஸ் ஜோடியைத் தோற்கடித்து 3ஆவது சுற்றுக்கு முன்னேறியது. (ஒ)

# பாக். அணித் தலைவருக்குத் தண்டனை: சர்வதேச கிரிக்கெட் சபை விளக்கம்



இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்ற இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான டெஸ்ட் போட்டியில் கள நடுவர்களிடம் அதிருப்தி தெரிவித்ததற்காக பாகிஸ்தான் அணித் தலைவர் இன்ஸமாம் உல் ஹக்குக்கு அபராதமும் ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடத் தடையும் விதிக்கப்பட்டது.

அதாவது இந்தியாவின் 2ஆவது இன்னிங்ஸின் 9 ஆவது ஓவரில் நடுவரின் முடிவுக்கு அதிருப்தி தெரிவித்ததற்காக இன்ஸமாமுக்கு அந்தப் போட்டிக்கான சம்பளத்தில் 30 சதவீத அபராதம் விதிக்கப்பட்டது. அதன் பிறகு 90 ஆவது ஓவரில் நடுவரை நோக்கி ஆக்ரோஷத்துடன் இன்ஸமாம் முறையிட்டதற்காக ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டியவர் அணித் தலைவர். உணவு இடைவேளையின்போது வீரர்கள் தங்கும் அறைக்குச் சென்று, அணிப் பயிற்சியாளரிடம் வீரர்கள் நடந்துகொண்ட விதம் குறித்து முறையிட்டேன். தேவையில்லாமல் 'அப்பீல்' கோர வேண்டாம் என்ற செய்தியை வீரர்களிடம் கூறச் சொன்னேன். அதன் பிறகு (90 ஆவது ஓவரில்) இன்ஸ்மாம் அம்மாதிரி நடந்திருக்கக் கூடாது. சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறையை மீறியதால் தடை விதிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது" என போட்டி நடுவர் கிறிஸ் பிராட் சர்வதேச கிரிக்கெட் சபையின் இணையத் தளத்தில் தெரிவித்துள்ளார்.




இதேவேளை, இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாநத் கருத்துத் தெரிவிக்கையில்:-

களத்தில் நிற்கும் வீரர்கள் ஆட்டத்தில் தனது அணி வெற்றி பெறவேண்டும் என்ற துடிப்பில் இருப்பார்கள். அத்தகைய சூழ்நிலையில் நடுவரின் முடிவுக்கு அதிருப்தி தெரிவிப்பதும், துடுப்பாட்டக்காரர் ஆட்டமிழந்தாரா என நடுவரிடம் முறையிடுவதும் சகஜமானது. அதே சமயம், ஆட்டமிழக்கும் துடுப்பாட்ட வீரர் மட்டையை நிலத்தில் அடிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவதும் வழக்கமானதே. இதற்கெல்லாம் தண்டனை விதிக்கும் நடுவராக உள்ள முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், தாம் அணிகளில் விளையாடியபோது நடந்துகொண்ட முறைகளை நினைத்துப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்தார். (ஒ)

# உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தகுதிச் சுற்று

ஜேர்மனியில் அடுத்தவருடம் நடைபெறவிருக்கும் உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டிக்காக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐரோப்பியத் தகுதி சுற்றில் இங்கிலாந்து 2-0 என்ற கோல் கணக்கில் அஜர்பைஜானை வென்றது. கிரீஸ் 2-0 என்ற கோல் கணக்கில் அல்பேனியாவை வென்றது. சுவிற்ஸர்லாந்து 1-0 என்ற கோல் கணக்கில் சைப்ரசை வென்றது. நெதர்லாந்து 2-0 என்ற கோல்கணக்கில் ஆர்மேனியாவை வென்றது. உக்ரைன் 1-0 என்ற கோல் கணக்கில் டென்மார்க்கை வென்றது. செக் குடியரசு 4-0 என்ற கோல்கணக்கில் அன்டோரவை வென்றது. போத்துக்கல் - ஸ்லோவாக்கியா (1-1) போட்டியும் பிரான்ஸ் - இஸ்ரேல் (1-1) போட்டியும் சமன் ஆகின. (ஒ)

# சர்வதேசக் கரபந்தாட்டத்தில் இந்தியாவுக்குச் சம்பியன் பட்டம்

இத்தாலியில் நடந்த கனிஷ்ட பிரிவு அணிகளுக்கிடையேயான கரப்பந்தாட்டப் போட்டியில் இந்திய அணி 'சம்பியன்' பட்டம் வென்றது.

பதினெட்டு வயதுக்குட்பட்டோருக்கான பெருசியா கார்னகியா நினைவு சர்வதேசக் கரபந்தாட்டத் தொடர் இத்தாலியில் உள்ள பர்டினன் நகரில் நடந்தது. 26முதல் 28ஆம் திகதி வரை நடந்த இந்தத் தொடரில் பிரேஸில், இங்கிலாந்து, குரோஷியா, இத்தாலி, ஜேர்மனி உள்ளிட்ட உலகின் முன்னணி அணிகள் பங்கேற்றன.

மிகச்சிறப்பாக விளையாடி சம்பியன் பட்டத்தை இந்தியா கைப்பற்றியது. லீக் சுற்றில் இந்திய அணி ஹங்கேரி, ஜேர்மனி அணிகளையும், காலிறுதியில் பெல்ஜியம் அணியையும் அரையிறுதியில் பல்கேரியா அணியையும் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது.

விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் 25:20, 25:22, 18:25, 25:21 என்ற செற்களில் ஹங்கேரி அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் கைப்பற்றியது இந்திய அணி. (ஒ)



இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையே நாளை கொச்சியில் நடைபெறும் முதல் ஒருநாள் போட்டியை முன்னிட்டு, நகரில் உள்ள பிரபலமானவர்களிடம் கையெழுத்து வாங்க எடுத்துச்செல்லப்படும் மெகா கிரிக்கெட் மட்டை இதுதான். 28 அடி நீளம், 4.5 அடி அகலம் கொண்ட இதன் எடை 3 தொன்.

## தென்மராட்சிப் பிரதேச ஆசிரியர்களின் ஆங்கிலவாண்மை விருத்திக்காக PVF வழங்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

மேற்படி ஆசிரியர்களின் ஆங்கில வாண்மை விருத்திக்கான PVF வழங்கும் பயிற்சிநெறி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் யாழ்.பல்கலைக்கழக போதனாசிரியர்களால் நாளொன்றிற்கு 2 மணித்தியாலம் வீதம் முதல் கட்டமாக 4 மாதங்கள் நடத்தப்பட்டு பயிற்சி முடிவில் தராதரப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. இப்பயிற்சி நெறியின் பாடவிதானம் IELTS தரமுடையதாக அமையும்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்பும் ஆசிரியர்கள் விண்ணப்பங்களை திரு.செ.சபாரத்தினம், பணிப்பாளர், PVF ஆங்கில பயிற்சி நெறி, முன்னாள் பிரதி அதிபர், C/O அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி என்ற முகவரிக்கு 30.04.2005இற்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி கேட்கப்படுகின்றார்கள். மேலதிக விவரங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

செ.சபாரத்தினம்,<br>
பணிப்பாளர்<br>
PVF ஆங்கிலப் பயிற்சி நெறி,<br>
முன்னாள் பிரதி அதிபர்<br>
C/O அதிபர்,<br>
சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி.

(21-32-14) (43687)



## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் நடுகல் நடும் நிகழ்வும்

வீர ஜனனம் 27 - 08 - 1981



வீரமரணம் 01 - 04 - 2000

### கப்டன் மணியரசன் (சிவம் சிவமயம்)

தமிழீழக் கனவுடன் முகம்தனை மறைத்த எங்கள் அன்பு மகனின் 5ஆம் ஆண்டு நினைவு நடுகல் நடும் நிகழ்வு இன்று (01.04.2005) வெள்ளிக்கிழமை நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி தெற்கு,<br>
அச்சுவேலி. (43527) (56-34-11-14-21) குடும்பத்தினர்.


## மயூரணி கொலை வழக்கு: விரைவில் தீர்ப்பு

மதுரை,ஏப்.1

தமிழகத்தில் தங்கிப் படித்து வருகையில் கொல்லப்பட்ட இலங்கை மாணவியான மயூரணி கொலை வழக்கில் சாட்சிகள் மீதான விசாரணைகள் முடிந்துவிட்டன. விரைவில் தீர்ப்பு வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் சாட்சிகள் மீதான விசாரணைகள் நேற்றுமுன்தினம் முடிவடைந்தன. நேற்றுமுன்தினம் இருதரப்பு சட்டத்தரணிகளின் வாதங்களையும் மன்று செவிமடுத்தது.

அரசுத் தரப்பில் 42 சாட்சிகளும், எதிர்த் தரப்பில் 3 சாட்சிகளும் விசாரிக்கப்பட்டனர். விசாரணைகள் முடிவடைந்துவிட்டதால் வெகு விரைவில் தீர்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த வழக்கில் கடந்த திங்கட்கிழமை சாட்சியமளித்த மயூரணியின் உறவினா மோகனதாஸ், இந்த வழக்கில் உண்மையான குற்றவாளி யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

நீதிபதி ஆறுமுகப் பெருமாள் ஆதித்தரிடம் அவர் மேலும் கூறியதாவது:-

கொலைச் சம்பவம் தொடக்கம் முதல் நடககும் விசாரணைகள் யாரையோ காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நடக்கின்றன. தமிழகப் பொலீஸாரின் திறமையைக் குறைத்து மதிப்பிடவில்லை. எனினும் உண்மையான, முழுமையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. அவாகளைக் கண்டுபிடிக்கவேண்டும் - என்றார்.(எ-க)

## கச்சாய்ப் பாடசாலையைத் தரமுயர்த்துமாறு கோரிக்கை

தென்மராட்சி,ஏப்.1

கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை மகா வித்தியாலயமாக தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திச் சபையினர் நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இப்பாடசாலையில் ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்பு நடத்த தென்மராட்சி கல்வி வலயம் 1992ஆம் ஆண்டு அனுமதி வழங்கியபோதிலும் பின்னர் அனுமதியைப் இரத்துச் செய்ததாகவும், ஜீ.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் பத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்கல்வி கற்கத் தகுதிபெறுகின்ற போதிலும் வேறு பாடசாலைகளுக்குச் சென்று உயர்கல்வி கற்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள குறிப்பிட்டுள்ளனர்.

இப்பாடசாலை மகா வித்தியாலயம் தரத்துக்கு உயர்த்தப்பட்டால் பெருமளவு மாணவர்கள இப்பாடசாலையில் உயர்கல்வி கற்க வசதி ஏற்படுமெனவும் அவர்கள் தெரிவித்தனர். (8-117)


YAMAHA Touching Your Heart

யமஹா இலவச மெக்கானிக் சேவிஸ்

இடம்- யமஹா பிளாஸா<br>
காலம்- ஏப்ரல்1ஆம்,2ஆம் திகதி<br>
நேரம்- காலை9.00-மாலை5.00

யமஹா மோட்டார் கம்பனியும் யாழ்.ஏக விநியோகஸ்தர்கள் யமஹா பிளாஸாவும் இணைந்து நடாத்தும் அனைத்து ரக யமஹா மோட்டார் சைக்கிள்களுக்கான இலவச மெக்கானிக் சேவிஸ் யமஹா கம்பனியின் விசேட தொழில்நுட்பவியலாளர்கள் கலந்துகொள்கின்றனர் இந்நிகழ்வில் அனைத்து யமஹா உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்



YAMAHA PLAZA யமஹா பிளாஸா<br>
298 KKS Road, Jaffna.<br>
021 4590 200<br>
0777 563 803



## நீங்காத நினைவில் ஈராண்டுகள்

தோற்றம் 19 - 09 - 1945



மறைவு 25 - 03 - 2003

### அமரர் குமாரசாமி தம்பிஐயா

(திதி: 01-04-2005)


பாசத்தின் இருப்பிடமாய்<br>
குடும்பத்தின் ஒளிவிளக்காய்<br>
பாரினில் நாம் வாழ வழிகாட்டியாய்<br>
இருந்த அன்பு அப்பாவே!<br>
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்<br>
ஆறவில்லை எம். மனது<br>
எப்போதும் உம் நினைவால்<br>
ஏங்கியே தவிக்கின்றோம்.

சந்தைவீதி,<br>
கொடிகாமம். (43657)(21-14) - குடும்பத்தினர்.



# நம்ப முடியாத 4 மடங்கு நன்மை! ஆனாலும் இது உண்மை!!

விசித்திரம் நான்கு



குளிர்பதனப்பெட்டி | 21" தொலைக்காட்சிப்பெட்டி | இரட்டை எரிவாயு அடுப்பு | மேசைக் காற்றாடி

நான்குமே மொத்தமாக

ரூ.49,990

LG Life's Good Haier

JAFFNA ELECTRICALS Authorised Dealer For Abans

# சிறுபோகச் செய்கை தொடர்பாக ஊரியான் விவசாயிகள் கவலை

பரந்தன்,ஏப்.1

இரணைமடுக்குளத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் இவ்வாண்டுக்கான சிறுபோக நெற்செய்கையில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று ஊரியான் கிராம விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் முரசுமோட்டை திட்ட உபகுழுப் பகுதியில் ஊரியான் கிராமம் உள்ளது.

இக்கிராம மக்கள் போரினால் பாதிக்கப்பட்டும் இடம்பெயர்ந்தும் பல்வேறு இன்னல்களை அனுபவித்தவர்கள். 2002ஆம் ஆண்டில் மீளக் குடியமர்ந்த இக்கிராமமக்களுக்கு மீள்குடியமர்வு உதவித் தொகையான 25ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதால் உலர் உணவு நிவாரணம் உட்பட அனைத்து உதவிகளும் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தநிலையில் சிறுபோக நெற்செய்கையிலும் தாம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரணைமடுக்குளத்தில் நீர்மட்டம் குறைந்துள்ளதால் குறைவான ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளும்படி தம்மிடம் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் கேட்டுள்ளனர் என்று ஊரியான் கிராம விவசாயிகள் தெரிவித்தனர்.

பல தடவைகள் கூடுதல் நீர்ப்பங்கைத் தருமாறு கோரியும் எவ்வித பயனும் கிடைக்கவில்லையென்றும் அவர்கள் கூறுகின்றனர். (ஒ-352-202)




## கிளிநொச்சி நகரில் தொழில்நுட்பப் பூங்கா

கிளிநொச்சியில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்கான அடிக்கல் நடும் விழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

'ஆஸ்திரேலியா ரெக்' அமைப்பின் நிதியுதவியுடன் பொருண்மியம் மதியுரையகம் இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைக்கிறது.

இதற்கான அடிக்கல் நடும் விழா கிளிநொச்சி அறிவியல் நகரில் நடந்தது.

இந்நிகழ்வில் பொருண்மிய மதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா, 'ஆஸ்திரேலியா ரெக்' நிறுவனத் தலைவர் பேராசிரியர் இராஜேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் சி.விஜேந்திரா ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

தொழில்நுட்பப் பூங்காவின் பெயர்ப்பலகையை கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் சோதி முருகேசு திரை நீக்கம் செய்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த ரவி அடிக்கல் நட்டு வைத்தார். பின்னர் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

இத்தொழில்நுட்பப் பூங்காவில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மரவேலை பயிற்றுவிப்பதற்கான தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படவுள்ளது. இப்பயிற்சியை பயிற்றுவிப்பதற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து பயிற்றுவிப்பாளர்கள் வரவழைக்கப்பட உள்ளனர். அதுடன் பயிற்சியாளர்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி மேலதிகப் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியின் முதல் பிரிவில் 25 தொடக்கம் 30 மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-352)




தொழில்நுட்பப் பூங்காவின் பெயர்ப்பலகையை தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் சோதிமுருகேசு திரைநீக்கம் செய்கிறார்.

## அடிப்படை வசதிகளின்றி இயங்கும் கிராஞ்சி சந்தை

முழங்காவில்,ஏப்.1

கிராஞ்சிப் பகுதியில் இயங்கும் சந்தை எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி இயங்குவதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நிரந்தரக் கட்டட வசதி இன்றித் தற்காலிகக் கொட்டகைகளிலே இந்தச்சந்தை இயங்குவதோடு மலசலகூட வசதியும் இல்லாமல் உள்ளது.

இச்சந்தையில் இயங்கிவரும் மீன் மற்றும் மரக்கறி விற்பனைப் பிரிவுகள் என்பவற்றில் சுகாதாரத்தைப் பேணுவதற்கேற்ற வசதிகள் கிடையாது. இதனால் சந்தையில் சுகாதாரக் கேடு நிலவும் ஆபத்துத் தோன்றியுள்ளது. இந்நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கிராஞ்சிச் சந்தையை நிரந்தரமாகப் புனரமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர் (ஒ-323-202)

## 'சந்தோஷம்' உளவள நிலையம் அக்கராயனில் திறக்கப்பட்டது

கிளிநொச்சி,ஏப்.1

கிளிநொச்சி அக்கராயனில் ஆண்களுக்கான உளவளத்துறை நிலையமான 'சந்தோஷம்' நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

திருமுறிகண்டி ஆலயப் பரிபாலன சபை இணைப்பாளர் சபாரட்ணம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் பொதுச்சுடரை தமிழர் புனர்வாழ்வுக்கழக சிறுவர் நலன் திட்டப் பணிப்பாளர் ரவியும், தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியைத் தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் நீகன் ஏற்றிவைத்தார்.

இந்நிலையத்தின் பெயர்ப்பலகையினை மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் திரைநீக்கம் செய்துவைத்தார். நிலைய விடுதியினை அரசியலதுறைத் துணைப்பொறுப்பாளரும் - அலுவலகக் கட்டடத்தினை ஆஸ்திரேலிய தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திருமதி சிராணி பரராஜசிங்கமும் - இளைப்பாற்று மண்டபத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊடகப் பணிப்பாளர் சங்கீதனும் சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டித் திறந்துவைத்தனர்.

இந்நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கெங்காதரன், யோகர்சுவாமி திருவடி நிலைய முதியோர் இல்லப் பொருளாளர் சாந்தலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வசிப்பவரான இராஜரட்ணம் குடும்பத்தினரின் நிதி உதவியுடன் மேற்படி நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-203)

## செஞ்சிலுவைச் சங்க அலகு மட்டக் கூட்டம்

கிளிநொச்சி,ஏப்.1

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக்கிளையின் அலகு மட்டப் பொதுக் கூட்டங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதுவரை பூநகரி, ஞானிமடம், பள்ளிக்குடா, கண்டாவளை, தருமபுரம், முரசுமோட்டை, கிளி.நகர் மத்தி, அக்கராயன் போன்ற கிளைகளில் பொதுக்கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

ஏனைய கிளைகளிலும் தொடர்ந்து கூட்டங்கள் நடைபெறவுள்ளன. (ஒ-305-202)

## சுனாமிப் பேரழிவால் ஆதரவற்றவரானோர்

விசுவமடு,ஏப்.1

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற சுனாமி பேரழிவால் முல்லைத்தீவில் 100 பிள்ளைகள் ஆதரவற்றோர் ஆகினர்.

இதேவேளை-

130 பிள்ளைகள் தந்தையையும் 349 பிள்ளைகள் தாயையும் இழந்துள்ளனர். அத்துடன் 90 கர்ப்பவதிகளும் முல்லைத்தீவில் சுனாமிக்குப் பலியாகியுள்ளனர். (ஒ-402-202)

## கரைச்சி அபிவிருத்தி நிறுவனத்துக்கு புதிய அலுவலகம்

விசுவமடு,ஏப்.1

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்திற்கான புதிய அலுவலகக் கட்டடம் புளியம்பொக்கணைச் சந்தியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த அலுவலகத்தின் கட்டடத் திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை நிறுவனப் பணிப்பாளர் அதியமான் ஏற்றிவைத்தார். அலுவலகப் பெயர்ப்பலகையை கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை திரைநீக்கம் செய்து வைத்தார். அலுவலகக் கட்டடத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து தருமபுரம் பாடசாலை அதிபர், இணையத் தலைவர், தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்விற்குத் தருமபுரம் பங்குத்தந்தை, கிராம சேவையாளர்கள், சுகாதாரத் தொண்டர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-402-202)

## வன்னியில் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பு

பரந்தன்,ஏப்.1

வன்னிப் பகுதியில் தற்போது நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இங்கு போதியளவு மலசலகூட வசதிகள் இல்லாமையும், இருக்கின்றவற்றைத் திருத்தி உரிய முறையில் பேணாமையுமே நுளம்புப் பெருக்கத்திற்குக் காரணம் என்று கிளிநொச்சி மாவட்ட பூச்சியியல் ஆய்வாளர் பொ.இராசதுரை தெரிவித்தார்.

மலசலகூடக் கழிவுகளாலேயே நோய்காவி நுளம்புகள் பெருகுவதாகவும்-

ஆயினும், மலேரியா நுளம்புப் பெருக்கத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி வருவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-352-202)

## வெப்பநோய்கள் பரவுகின்றன

ஒட்டுசுட்டான்,ஏப்.1

நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவி வருகின்றன.

கடந்த வாரம்முதல் அதிகரித்து வரும் வெப்பத்தால் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருவதோடு காய்ச்சல், இருமல் போன்ற நோய்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

(ஒ-341-202)




## கிளிநொச்சியில் ஆசிரிய நிலையங்கள்

வட்டக்கச்சி,ஏப்.1

ஆசிரியர் கல்வி மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் இரு ஆசிரிய மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் பரந்தன் இந்து மகாவித்தியாலயம், அக்கராயன் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இந்த மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த மத்திய நிலையங்கள் தலா 60 லட்சம் ரூபா செலவில் சகல வசதிகளும் கொண்டதாக அமைக்கப்படுகின்றன. இவற்றுக்கான கட்டடங்களை அமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றன. (ஒ-405-202)

## கணனி வள நிலையம்

வட்டக்கச்சி,ஏப்.1

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் இடைநிலைக் கல்வி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கணனி வள நிலையம் ஒன்று கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

நாற்பது லட்சம் ரூபா செலவில் பல வசதிகளைக் கொண்டதாக இந்நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. (ஒ-405-202)

## சுற்றாடல் தின நாடகப் போட்டி

கிளிநொச்சி,ஏப்.1

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடன் கிளிநொச்சி அரச செயலகம் பாடசாலைகளுக்கிடையே மாவட்ட மட்ட நாடகப் போட்டிகளை நடத்தியது.

கடந்த மாதம் 29 திகதி அழகியல் கலாமன்றத்தில் இப்போட்டிகள் இடம்பெற்றன. நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி படையணியைச் சேர்ந்த போராளி காண்டீபன் ஏற்றிவைத்தார்.

போட்டிகளில் முதலாம் இடத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரியும் இரண்டாம் இடத்தைப் பூநகரி மகாவித்தியாலயமும் மூன்றாம் இடத்தை வட்டக்கச்சி மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. (ஒ-301-202)

## பஸ் சேவையில் குறைபாடு

பரந்தன்,ஏப்.1

கிளிநொச்சி - வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்கான பஸ்சேவை போதியளவு செயற்படாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகப் பயணிகள் கூறுகின்றனர்.

இப்பகுதிகளுக்கான பஸ்சேவை பல மணி நேரங்களுக்கு ஒரு முறை நடைபெறுவதால் பஸ்ஸுக்காகப் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்து பயணிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவசர தேவைகளுக்கு மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே உரியவர்கள் இந்த நிலையை மாற்ற விரைந்து செயற்படவேண்டும் என்று பொதுமக்கள் கோருகின்றனர். (ஒ-352-202)

## மாவீரர் நினைவாக படிப்பகம் திறப்பு

புதுக்குடியிருப்பு,ஏப்.1

புதுக்குடியிருப்பு இரணைப்பாலைக் கிராமத்தில் மாவீரர் நினைவாகப் படிப்பகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி விளையாட்டுக் கழகத் தலைவர் அ.மரியநாயகம் தலைமையில் படிப்பகத்தின் திறப்பு விழா இடம்பெற்றது. இந்நிகழ்வில் முல்லை மாவட்ட தொழிற் சங்கப் பொறுப்பாளரும் புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளருமான சி.பிறையாளர் படிப்பகத்தை நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

நிகழ்வில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர் செ.அல்பிரட், கிராமப் பெறுப்பாளர் பரிதியன், இரணப்பாலைப் பங்குத்தந்தை ஆனந்தகுமார் அடிகளார் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இப்படிப்பகம் ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-353-202)

# 7ஆம் ஆண்டு நினைவிலே

அமரர்
## கப்டன் ஒப்பிலாமணி



தாயின் மடியில்
07.03.1974

தாயக மண்ணில்
01.04.1998

*காலச் சிதறலில் எம்மைக் கலங்கவைத்து*
*மாவீரன் என்று எல்லோரும் புகழ*
*மண்ணிற்காய் உன்னுயிர் தந்த மணியே*
*எங்கள் ஒப்பிலா மணியே*
*உன்னை பெற்றதிற்காய்*
*இன்று பெருமிதம் கொள்கின்றோம்.*
*உன் இலட்சியம் நிச்சயம் நிறைவேறும்.*

என்றும் உன் பிரிவால் துயருறும்:
**அன்பு அப்பா, அம்மா, அக்காமார், அண்ணாமார், தங்கை, தம்பி, மாமா, மாமி, பெரியப்பாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், மருமக்கள், பெறாமக்கள் மற்றும் தமிழ் பேசும் மக்கள்.**

*71/16, நாவலர் வீதி,*
*நாவாந்துறை.* (43725)(22-11-16)

# புலிகளின் மற்றொரு போராளியும் அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டார்

அம்பாறை.ஏப்.1

அம்பாறை மாவட்டம் தங்கவேலாயுதபுரம் கோட்ட புலிகளின் அரசியல் பொறுப்பாளர் எம்.ஜெயப்பிரகாஷ் கடந்த 28 ஆம் திகதி விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டுள்ளார் என்று புலிகள் தெரிவித்தனர்.

தங்கவேலாயுதபுரத்திலிருந்து திருக்கோயில் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது பிற்பகல் 3 மணியளவில் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினரால் தாம் தாக்கப்பட்டார் என்று ஜெயப்பிரகாஷ் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து அவர் தெரிவித்ததாவது:

தங்கவேலாயுதபுரத்தில் இருந்து திருக்கோயில் நோக்கி வரும் போது காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினர் என்னை மறித்தனர். என்னைச் சுற்றி ஆறு படையினரும் முகாமை சுற்றிப் பலரும் இருந்தனர். என்னருகே வந்த படையினர் வாகன பதிவுப் புத்தகத்தைக் கேட்டனர். என்னுடைய மோட்டார் சைக்கிள் புதிதாக வாங்கியது என நான் கூறினேன்.

தமிழீழ விடுதலைப் புலி என உறுதிப்படுத்தும் எனது இலக்கத் தகட்டை என் கழுத்தில் இருந்து படையினர் அறுத்து வீசினர்.

"ஏன் தகட்டை வீசினீர்கள்" என்று கேட்டேன்.

அதற்குப் பதிலளிக்காத அவர்கள் என்னை முகாம் அருகே அமர்த்தினர். அதன்பின்பு இயக்கத்திற்கு எதற்கு வந்தாய்? விரும்பியா வந்தாய்? எனக் கேள்வி கேட்டனர். என்னுடைய தேவைக்காக விடுதலைப் புலியுடன் இணைந்தேன் என நான் கூறியதும் என்னைத் தாக்க ஆரம்பித்தனர்.

சுற்றிவளைத்து நின்று கையாலும், கம்பாலும் தாக்கினர். சிறிது நேரம் உணர்வற்றுக் கிடந்தேன். பின்னர் அவ்வழியே வந்த பஸ் ஒன்றிலிருந்து பயணிகளை இறக்கி இதில் இயக்கம் இருக்கின்றதா என காட்டுமாறு மிரட்டினர். பின் அவர்களைப் போகச் சொன்னார்கள். அப்பொழுது என்னுடைய மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு செல்லநான் முயல்கையில் அதனைத் தள்ளிக்கொண்டு நடந்துபோ எனக் கூறினர்.

- இவ்வாறு ஜெயப்பிரகாஷ் தெரிவித்தார்.

புலிகளின் அம்பாறை மாவட்டப்பொறுப்பாளர் குயிலின்பனும், வேறு சில போராளிகளும் கூட கடந்த 28 ஆம் திகதி விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டுக் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-க-13)

# சைவநெறித் தேர்வில் சித்திபெற்றோருக்குப் பரிசில்

யாழ்ப்பாணம்.ஏப்.1

யாழ்.சைவபரிபாலன சபையினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வில் சித்திபெற்று அகில இலங்கைப் பரிசில் பெறும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைபரிபாலன சபையின் தலைவரும், சபையின் பரீட்சைச் செயலருமான சைவப் புலவர் கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

அன்றையதினம் காலை 9 மணிக்கு விசேட பூசை, திருமுறை ஓதல் என்பன இடம்பெறும். தொடர்ந்து ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் வரவேற்புரையை ஆசிரியமணி அ.பஞ்சாட்சரவிமும் நிகழ்த்துவர்.

முற்பகல் 10.20 மணி முதல் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி சிவகஜனி சிறீக்குமார் 'சைவ ஒழுக்கம்' என்ற பொருளிலும் குமரேசன் பாலசண்முகன் 'வாழ்க்கையில் திருமுறைகள்' என்ற பொருளிலும், ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் செ.கந்தசத்திய தாசன் 'சைவத்தின் பெருமை' என்ற பொருளிலும் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

பிரதம விருந்தினரின் உரையைத் தொடர்ந்து சைவநெறித் தேர்வில் சித்திபெற்ற மாணவர்கள் மற்றும் சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்களை யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா வழங்குவார்.

(எ)


PRINCIPAL REQUIRED
**CHANDRAN INTERNATIONAL SCHOOL**

Applications are invited from those with qualification and experience for the Post of Principal for our Chandran International School (English Medium) at Kilinochchi.

Initial Salary would be Rs.15,000.00 per month. This Figure shall be negotiable based on experience and qualification.

Please send Applictions to reach us **on or before 27.04.05**

**To:**

**The Director,**
**CHANDRAN INTERNATIONAL SCHOOL,**
**KILINOCHCHI.**

(21-14) (C/41928)


## நவாலி ஆலயத்துக்கு புதிய சித்திரத் தேர்

நவாலி முருக மூர்த்தி ஆலயத்திற்கு 60 லட்சம் ரூபா செலவில் புதிய சித்திரத் தேர் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

கலையம்சங்கள் பொருந்திய இந்தத் தேரின் முதற்கட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன என ஆலய நிர்வாகி வே.சிற்றம்பலம் தெரிவித்தார். (எ-185)

## நிரந்தர வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

அனலைதீவு அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி இன்மையால் அங்குள்ள மக்கள் தமக்கென வைத்திய சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தி அதிகாரி ஒருவரை நியமித்துத் தருமாறு அப்பகுதி மக்கள் யாழ். சுகாதாரத் திணைக்களத்திடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது. (எ-135)

## நூல் வெளியீட்டு விழா

'தேச அபிவிருத்தியில் தமிழர் கல்வி' என்னும் நூல் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சபா ஜெயராசா, யாழ். பல்கலைக்கழகக் கல்வியியற்றுறைத் தலைவர் மா.சின்னத்தம்பி ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

தொடர்ந்து வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் பெற்றுக்கொள்வார். (எ-203)

## விசேட கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள தனியார் ஆங்கில மருத்துவ நிலையங்கள், ஆலோசனை நிலையங்கள், ஆய்வுகூடங்கள், மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையங்கள், பற்சிகிச்சை நிலையங்கள், கண்சிகிச்சை நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவருக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் கூட்டுறவு, பொது அமைப்புக்கள், மருத்துவ நிலைய நிர்வாகிகள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## கண்ணீர் அஞ்சலி



மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட
### அமரர் சூசைப்பிள்ளை சிங்கராயர்
*(முன்னாள் அதிபர், புனித சூசையப்பர் மகாவித்தியாலயம் மாதகல்)*

அவர்கள் 29.03.2005 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**கொலின் குடும்பத்தினர்,**
**கயித்தாம்பிள்ளை குடும்பத்தினர்.**

*பிரதான வீதி,*
*மாதகல்.* (43721)(46-11-45)

## கண்ணீர் அஞ்சலி



வடபிராந்திய விவசாய ஆராய்ச்சிப் பகுதியில் எமது பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற
### ஆறுமுகம் செந்திநாதன்

அவர்கள் 30.03.2005 அன்று காலமாகியதை அறிந்து மிகவும் துயரடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்*
**உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.**
**விவசாய ஆராய்ச்சிப் பிரிவு.**

திருநெல்வேலி,
கிளிநொச்சி,
வவுனியா.
(43720)(42-11-45)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் **திரு.செ.உதயகுமார்** அவர்களின் பாசமிகு தாயார்
### திருமதி செல்லத்துரை மகேஸ்வரி

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**வலயக் கல்வி அலுவலகம்,**
**தென்மராட்சி கல்வி வலயம்,**
**சாவகச்சேரி.**

(சி-41927)(21-14-11)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராகப் பணிபுரிந்த
### அமரர் கந்தையா விஜயரட்ணம்

அவர்கள் 30.03.2005 புதன்கிழமை காலமாகிய செய்தி அறிந்து மிகவும் துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்.
**மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை.**

(43719)(42-11-45)


**30.03.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்**

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 200190960 இலிருந்து
200209641 வரை

சீட்டிழுப்பு இல. 1594

**23 29 33 50** சுப்பர் எண் **02**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.**46,92,950/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 46,92,950/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 42 | 5,000/- | 2,10,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 479 | 1,000/- | 4,79,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,608 | 500/- | 8,04,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 24,271 | 40/- | 9,70,840/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,271 | 20/- | 4,59,320/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,45,155 | 10/- | 34,51,550/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.88,74,750/-

**இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 56,15,100/-**

தொடர் இல. 3004180613 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஏப்ரல் 02 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

**200204855-0-19**
**200197458-9-00**
**200192506-0-94**
**200191756-8-76**
**200199168-2-78**

வளமான வாழ்விற்கு

இல. 33,சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் பேசப் பயில By.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), K.K.S.வீதி, யாழ்ப்பாணம்., பிளாக் வீதி, சங்கானை.

(43717)(42-11-45)

# நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைப்போம்; சமயம் கூறும் அடிப்படைக் கருத்து இதுவே!

நமது வாழ்வு வளமாகவும் சிறப்பாகவும் அமைய வேண்டுமெனில் நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கவேண்டும். நல்லவர்களாக இருந்து நல்லவற்றையே செய்யவேண்டும். காந்தி அடிகளின் 'குரங்குப் பொம்மை' இதனையே உணர்த்துகின்றது. நல்லது செயய முடியாவிட்டாலும் தீயதைச் செய்யாமல் இருக்க வேண்டும். இதனையொட்டியே,

"நல்லது செய்தல் ஆற்றராயினும்
அல்லது செய்தல் ஒழியுமின்" என்று சங்கப் புலவர் நரிவெரூடகத் தலையார் கூறியுள்ளார்.

இக்கோட்பாட்டின்படி ஒவ்வொருவரும் நடக்கத் தலைப்பாட்டால் உலகில் கூச்சல் இல்லை, குழப்பம் இல்லை, சச்சரவில்லை, சண்டையிலலை, அன்பு தளைக்கும், அமைதி நிலவும், ஆனந்தம் பிறக்கும்.

வாழ்வில் எல்லோருக்கும் எல்லாம் வாய்ப்பதில்லை. நல்லது கெட்டது எல்லாம் கலந்தே நடக்கும். இது நமதுஆற்றலுக்கு அப்பாற்பட்டது. ஊழவினை உறுத்து வந்து ஊட்டும் என்ற இளங்கோ அடிகள் கூற்று இதனை உறுதி செய்கின்றது. 'தீதும் நன்றும் பிறர்தரவாரா' என்பதற்கேற்ப இன்பமும் துன்பமும் கலந்ததே நம் வாழ்வு. முயற்சி திருவினை ஆக்கும் என்ற மூதுரைக்கேற்பவும் ஊழையும் உட் பக்கம் காணலாம் என்று வள்ளுவர் கூறியிருந்தாலும், நமக்குச் சேர்வதுதான் சேரும்.

ஆனால், சிலவேளைகளில் எதிர்பாராத வகையில் செல்வம் சேரும். ஆனால், அது வந்தது போலவே சென்றுவிடும்.

போங்காலத்தே பொருள், புகழ் போகும். எனவே, ஆவதையும் போவதையும் எண்ணி அலட்டிக் கொள்ளாமல் கலங்காதிருமனமே என்று அமைதி காக்கவேண்டும்.

மனதில் களங்கமில்லாதிருக்க பொய் பேசக் கூடாது, புறங்கூறக்கூடாது. நல்லவர்களுடன் நட்புக்கொள்ளவேண்டும் என்பது வள்ளலாரின் கருத்து.

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் தம் உறவு கலவாமை வேண்டும்" - என்று அர்த்தம் கூறுகின்றது.

நினைத்ததை முடிக்க நெஞ்சுரம் வேண்டுமென்கிறார் பாரதியார். தூய நெஞ்சும் துணிவான போக்கும் அவரது இரு விழிகள்.

"மனதில் உறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டும்?" நினைவு நல்லது வேண்டும் என அவர் பாடியுள்ளார்.

ஊரையடித்து உலையில் போட்டு, லஞ்சம் வாங்கி, லட்சம் சேர்த்து பாவி என்று பட்டம் பெறக்கூடாது. மானிட வாழ்வின் மகத்துவம் எல்லாம், ஜனனம் மரணத்தைச் சந்திக்கும் வரையிலேயாகும். எனவே, இந்த இடைப்பட்ட குறுகிய காலத்தில் நல்லவன், அன்பன், நன்றி மிகுந்தவன் என்ற பெயரைப் பெறவேண்டும்

**ஞானக்கதிர்**

- நல்லவன் என்று பெயரெடுப்பது சுலபமானதல்ல.

மனிதன் தனது வாழ்வில் எத்தனை ஆட்டம், அட்டூழியங்கள் செய்கின்றான். தனக்கு ஒரு முடிவில்லை என்ற எண்ணத்தில் அவனது செயல்கள் அருவருப்பானவையாக அமைந்துவிடுகின்றன. இயந்திரமயமான வாழ்வுக்குள்ளே இடர்ப்படுகின்ற காரணத்தால் மனித இதயம் இறுகிவிடுகின்றது போலும். வாழ்வாங்கு வாழ்பவன வழிபடுதலுக்கு ஆளாகின்றான் என்பதால், நன்று செய்து நலமாக வாழ்வதென்றே வாழ்வினைத் தொடங்கினால் நெஞ்சம் சந்நிதியாகும். நித்தமும் நிம்மதியும் ஏற்படும்.

*"என்னதான் நடக்கும் நடக்கட்டுமே*
*இருக்கும் வரை ஏற்றம் இறக்கம் ஏற்பட்டாலும்*
*எந்தநிலையிலும் வந்தனை உறுதியாலே வாழ்வு*
*வளமாய் வாய்த்திடும் நன்றே".*

**பரமேஸ்வரி சிவராமலிங்கம்**

# திருப்பதி – திருச்சானூரில் சிறப்புற நடந்த ஸ்ரீ பரமபுருஷ ஆராதனை நிகழ்வு

## இலங்கை, இந்தியக் குருமார்கள் பங்கேற்பு

வலி.தெற்கு,ஏப்.1

இலங்கையின் பிரபல சிவாச்சாரியார்கள் இந்திய சிவாச்சாரியார்களுடன் இணைந்து நடத்திய ஸ்ரீ பரமபுருஷ ஆராதனை நிகழ்வு அண்மையில் திருப்பதியில் உள்ள திருச்சானூரில் அமைந்துள்ள அகில இந்திய ஆரிய - வைசிய சமாஜ மண்டபத்தில் ஐந்து தினங்களாக வெகு சிறப்பாக நடைபெற்றது.

கடந்த மாதம் 26ஆம் திகதி தொடக்கம் திருப்பதியில் உள்ள மேற்படி மண்டபத்தில் மகாகணபதி ஹோமம், புருஷசூகதஜபம் (லட்சம் தடவைகள்) ஸ்ரீ ஸூக்த ஜபம்அயுதம் (பததாயிரம் தடவைகள்) ஜபம், ஹோமம் என்பவையும் ஸ்ரீபரம புருஷ ஆராதனை என்பனவும் இடம்பெற்றன.

கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்னர் வாரணாசியில் இரண்டு மகாயாகங்களை நடத்தி வைத்த திருச்செந்தூர் பிரம்மஸ்ரீ ஸ்ரீராமானந்த சாஸ்திரிகள் தலைமையில் ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியார்கள் உட்பட 130 சிவாச்சாரியார்கள் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபரும இணுவில் காயத்ரீ பீடத்தைச் சேர்ந்தவருமான சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள், மருதானை கப்பித்தாவத்தை ஆலயத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ ராதாக் குருக்கள் மற்றும் விஸ்வ நாராயண சாஸ்திரிகள் ஆகியோரும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் இருந்து சென்ற சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் தம்பதிகள், ராதா குருக்கள் தம்பதிகள் ஆகியோருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கபபட்டதுடன் பாராட்டும் வழங்கப்பட்டது.

(எ-152)



ஸ்ரீ பரம புருஷ ஆராதனை நிகழ்வுகளை நடத்திய பிரதம சிவாச்சாரியர்களான சிவஸ்ரீ ராதாக்குருக்கள் (மருதானை), விஸ்வ நாரராயண சாஸ்திரிகள், சிவஸ்ரீ ராமானந்த சாஸ்திரிகள் (திருச்செந்தூர்), சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் (இணுவில்) ஆகியோரைப் படத்தில் காணலாம். (படம்: வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)

# ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்னும் 6ஆண்டுகள் ஆட்சியில் இருப்பாராம்

## அமைச்சர் அனுரா சொல்கிறார் இப்படி!

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது இடம் பெறும என்ற சர்ச்சைகள் எழுந்திருக்கும் நிலையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும ஆறு வருடங்களுக்கு ஆட்சியில் இருப்பாரென்று வாய்ப்பந்தல் போடுகிறார் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க.

நகர அபிவிருத்தி அலுவலகமொன்றை கம்பஹா மிரிஸ்வத்த பகுதியில் திறந்து வைத்து உரையாற்றிய அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க, ஆட்சிக்கு வருவதாயின் ரணிலின் ஐக்கிய தேசியக்கட்சி இன்னும் இருபது வருடங்கள் காத்திருக்கவேண்டுமென்றும் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

நான்கூறும் விடயங்கள் எவையும் நடக்காமல் தவறிப்போகா. இன்றும் நான் ஒரு முக்கியமான விடயத்தைக் கூற விரும்புகின்றேன். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உடைந்து போகாது. ஜனாதிபதி மேலும் ஆறு வருடங்கள் பதவியல் இருப்பார். ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் 20 வருடமாவது காத்திருக்க வேண்டும். சர்வதேச சந்தையில் எரிபொருள்விலை அதிகரிப்பதினால் ஏற்படும் தாக்கங்கள் காரணமாகவே நாட்டில் வாழ்க்கைச் செலவு வீதம் அதிகரித்து வருகிறது - என்று அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார்.

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின் படி ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதிப் பதவி வகிக்கமுடியாது. தமது இரண்டாவது பதவிக்காலத்தின் அந்தத்தில் ஜனாதிபதி சந்திரிகா உள்ளார். அப்படி இருக்கையில் இன்னும் ஆறு வருடங்களுக்கு ஆட்சியில் நீடிப்பார் என அனுரா பண்டாரநாயக்கா பகிரங்கமாகக் கூறியது பலரது புருவங்களையும் உயர வைத்திருக்கின்றது.

(எ-க)

# தெய்வீக ஸ்தலங்களில்




இணுவில் சிவகாமி அம்மன் ஆலய முன்றிலில் அமைந்துள்ள "சிதம்பரநாதன் ஞாபகார்த்த இல்லத்தினை" செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அண்மையில் திறந்துவைத்தார். கோண்டாவில், நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ தா.அரிகரசுப்பிரமணியக் குருக்கள் வேதபாராயணம் செய்வதைப் படத்தில் காணலாம். (எ)



கோண்டாவில் வடக்கு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பண வைபவத்தில் சிவஸ்ரீ சி.மகேஸ்வரக் குருக்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் ஸ்ரீ வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் வ.சந்திரசேகரம், செயலாளரான க.முருகையா, நல்லூர்ப் பிரதேச பயிற்சிக் கலாசார உத்தியோகத்தர் எஸ்.ஜெயராசா ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-49)



சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது மாணிக்கவாசகரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வீதியுலா வந்தபோது எடுக்கப்பட்ட படம் இது. (எ-13)



கொழும்புத்துறை மேற்கு வதிர விநாயகர் ஆலயப் பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட யாழ். அரச அதிபருக்கான வரவேற்பு உபசார விழாவில் அரச அதிபர் கே.கணேஷ் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்: அரியாலைச் செய்தியாளர்)

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்





இந்தியாவிலிருந்து வந்துள்ள
**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம், கைரேகைமூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

**அறை எண் 5, பிள்ளையார் இன்,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No.5, Pillaiyar Inn**
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2839
Mobile: 0776 923623.

(C/41868)(26-14-11)


## 17ஆம் நாள் நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 01 - 1963 | 16 - 03 - 2005 |

**சிவஸ்ரீ ச.வைத்தியநாதன் ஐயா (நாதன் ஐயா)**
(ஆசிரியர், மண்டாக்குளம்பதி நாச்சிமார் தேவஸ்தான அர்ச்சகர்)

உள்ளத்தில் பசுமரத்தாணியாய் பதிந்த ஐயாவே!
உலகியல் வாழ்வு உப்பைப் போல் கரைந்திடுமோ?
உங்கள் புன்னகை தவழும் வதன மதிமுகமும்
உயர்ந்த பண்பும் சேர உவப்போடு வலம் வந்தவரே!
உங்கள் வரவின்றி எமது இடமெல்லாம் வெறுமையாகி விட்டபோதும்
உள்ளளவும் நினைப்போம் உங்கள் உயர் தொண்டினை
உங்கள் ஆத்மசாந்திக்காய் உமையவளைத் தொழுகின்றோம்.
ஓம்சாந்தி சாந்தி!! சாந்தி!!!

பரிபாலன சபையினர்,
மண்டாக்குளம்பதி நாச்சிமார் தேவஸ்தானம்,
இருபாலை.

(43313)(46-11-14-26)


## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள Sony T.V. (Japan), VEDIO டெக், AUDIO DUB டெக், PIONEER செற், DVD MP3 பிளேயர், AUDIO கெசற் டெக், அம்பு என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: ஜெகன் வீடியோ, ஓடியோ சென்ரர்
சட்டநாதர் வீதி, திருநெல்வேலி.
T.P.: 0776 547245
(43682)


## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.1

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்ப பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி அண்மையில் பிக்னெல் மைதானத்தில் இடம்பெற்றது.

ஆரம்ப பாடசாலை அதிபர் வண.பிதா ஜி.நடராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆரம்ப பாடசாலை மாணவ முதல்வன் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இதில் பிரதம விருந்தினராக செல்வி கிரேஸ் பங்கரும் சிறப்பு விருந்தினராக கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரனும் கலந்து கொண்டனர்.

வினோத உடைப்போட்டியில் 'சுனாமி' தாக்கத்தை வெளிப்படுத்திய மாணவர்களுக்குச் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-185)

## பிரதேச சபைக்கு [illegible] பெற நடவடிக்கை

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச [illegible] நான்கு சக்கர உழவு இயந்திரமும் [illegible] பெட்டியும் பெற்றுக்கொடுக்கப்படும் [illegible] பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் நான்கு சக்கர உழவு இயந்திரம் இல்லாததால் கழிவகற்றல் மற்றும் குடிதண்ணீர் விநியோகம் போன்ற பணிகளில் சிரமம் ஏற்படுகிறது.

[illegible] மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையடுத்து யாழ்.அரச அதிபர் ஊடாக வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு இந்த உழவு இயந்திரம் [illegible] எனஉள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ஒ-185)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 20. 01. 1941 — விண்ணில் 26. 04. 2004
திதி: 26.04.2005

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்றழைக்க உறவு ஒன்றில்லை
வசந்தம் தவழ்ந்த மனையிலே
வாழ்வு சிதைந்து போனதுவே!
ஆண்டு ஒன்று போனாலும்
அன்பின் அலைகள் கலையாது.

அமரர் பொன்னையா தேவராசா

சிவன்கோவிலடி, சாவகச்சேரி.
தங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள்

(43633)(54-11-15-14)

## அறிவித்தல்

### மாநகர சபை, யாழ்ப்பாணம்
### ஒப்பந்தகாரர்களைப் பதிவுசெய்தல்

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகள், பெட்டிமதகுகள், வடிகால்களைப் புனரமைப்பதற்கும் கட்டடங்களைப் புனரமைப்பதற்கும் நிர்மாணிப்பதற்கும்

- ▲ கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
- ▲ விவசாய சம்மேளனங்கள்
- ▲ கூட்டுறவுச் சங்கங்கள்
- ▲ சமுர்த்திச் செயலணிகள்
- ▲ "இக்ராட" பதிவுள்ள ஒப்பந்தகாரர்கள்

யாழ்.மாநகர சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துத் தங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 01-04-2005 தொடக்கம் 15-04-2005 வரை அலுவலக நேரத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு யாழ்.மாநகர சபையின் வேலைப்பகுதியுடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-41905)(26-11-14)

கலாநிதி க.குணராசா,
ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.


## புதுவருட சிறப்புத் தள்ளுபடி விற்பனை!!!

செய்மதி தொலைக்காட்சித்துறையில் இலங்கையில் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களை வென்று எடுத்துள்ள Sats - Tech நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்குப் புத்தாண்டுச் சிறப்பு விலையில் செய்மதித் தொலைக்காட்சி உபகரணங்களை வழங்கி வருகின்றது.

'Ku' band DISH சிஸ்டம் Rs * 12,500 /= மட்டுமே
8' C` band DISH சிஸ்டம் Rs * 19,999 /= மட்டுமே
8' C` band &Ku band சிஸ்டம் Rs * 22,000 /= மட்டுமே

★ மற்றும் அனைத்துக் கேபிள் TV இற்குரிய உபகரணங்களும் மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

- ★ ஒரு வருட உத்தரவாதம்
- ★ விற்பனைக்குப் பிந்திய சேவை
- ★ Free Channel up dating
- ★ Free Software up dating
- ★ இலவசத் தொழில்நுட்ப ஆலோசனைகள்
- ★ தெளிவான காட்சி
- ★ துல்லியமான ஒலி

சித்திரை 14வரை அல்லது கையிருப்பு முடியும் வரை மட்டுமே!

**SATS - TECH ENGINEER'S**
(National Video Center)
182. K.K.S. Road. Kokuvil
(Near Kulapitty Church) , Jaffna.
Phone. (021)222 5908, 0777 710785.
(சி41069)(38-11-14-26)


## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்...



தோற்றம்: 10 - 08 - 1930
மறைவு: 01 - 04 - 2003

அமரர்
**சின்னத்தம்பி பாக்கியம்**

ஆண்டுகள் இரண்டு ஓடிமறைந்தாலும் அன்னையே
ஈண்டு உங்கள் நினைவுடனேயே நாமிங்கு
வாழ்கின்றோம்
மாண்டு நீங்கள் போனதால் மனம் மிக
வருந்துகின்றோம்.
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை
வேண்டுகின்றோம்.

இல.46,ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்.

(43670)(50-11-15)

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்





தோற்றம் 23. 10. 1975 — மறைவு 18. 02. 1995
தோற்றம் 23. 04. 1977 — மறைவு 01. 04. 1995

மணிக்குரல்: ச. மணிவதனன் + ச. ஜெயச்சித்திரா

பாரினில் எம்மைப் பரிதவிக்கவிட்டுவிட்டு நீவிர் மறைந்து 10ஆண்டுகள்
கல்வியிலே கலைகளிலே விளையாட்டுத் துறையினிலே
வெற்றிகள் பல குவித்த வீரத்தின் விளை நிலங்களே!
பத்துத்திங்கள் மடி சுமந்த அன்னையவள் பரிதவிக்க
பார்போற்ற உமை வளர்த்த தந்தையோ தாளாத வேதனையில்....
உம் சோதரர்கள் சோகத்தின் விளிம்பில் விம்மி அழ
பத்து ஆண்டுகள் பறந்தோடி மறைந்தாலும்
பாரினில் உங்கள் புகழ் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கும்:

மணிக்குரல் V. S. சற்குணம்,
52, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.

அம்மா, அப்பா,
சகோதரர்கள்.

(43653) (54-11-14)

# மின்சக்தி, எரிபொருள் அமைச்சுப் பதவியை வேண்டா வெறுப்புடன் வகிக்கும் அமைச்சர்

மின்சக்தி அமைச்சர் பொறுப்பை தாம் மிகவும் அதிருப்தியுடனேயே வகிக்கின்றார் எனவும் வேறோர் அமைச்சுப் பொறுப்புக் கிடைத்தால் மக்களுக்கு நன்கு சேவையாற்ற முடியுமென்பதால் வேளைவரும்போது தமது அமைச்சை மாற்றுமாறு ஜனாதிபதியிடம் தாம் வேண்டுகோள் விடுக்கவுள்ளார் எனவும் மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

மின்சக்தி, எரிபொருள் அமைச்சுப் பதவியிலிருந்து அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த இராஜினாமாச் செய்யப்போகிறார் எனப்பரவலாகச் செய்திகள் வெளிவந்துள்ள நிலையில் இதன் உண்மைநிலை என்னவென்று கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது:-

இந்த அமைச்சின் மூலம் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டு அவற்றைத் தீர்த்துவைக்க முடியாத பரிதாபநிலை இருக்கிறது. இங்கே தொழிற்சங்கங்களின் பிரச்சினைளை மட்டுமே தீர்க்கவேண்டியுள்ளது. இப்போது உதாரணத்திற்கு மின்சாரசபை மறுசீரமைப்பு விடயத்தைப் பாருங்கள் கடந்த 11 மாதகாலமாக இதுபற்றி நான் பேச்சுக்களை நடத்தினேன்; பயனில்லை. இன்னும் மேலும் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்த வேண்டியுள்ளது இவை நேரத்தை வீணடிக்கும் செயல்களாகும்.

நேற்றுமுன்தினம் தலவத்துகொட பகுதியில் பலமணிநேரம் மின்சாரம் தடைப்பட்டிருந்தது அந்தப்பகுதிமக்கள் மின்சாரசபை நிலையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியும் பலனளிக்காத காரணத்தினால் நேரடியாக என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர் அதில்நான் தலையிட வேண்டிவந்தது.

பிரச்சினைகளை ஏற்படுத்தும் தொழிற்சங்கங்கள் மக்களின் இவ்வாறான பிரச்சினைகளைத் தாமே தீர்க்க முன்வரவேண்டும்.

## நூல் வெளியீட்டு வைபவம்.

யாழ்ப்பாணம், ஏப்.1

'தேச அபிவிருத்தியில் தமிழர் கல்வி' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை முற்பகல் 9.30 மணியளவில் யாழ். தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி நிர்வாக உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரப்பிள்ளையின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நூலின் முதற்பிரதியை யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் பெற்றுக்கொள்வார்.

நூலின் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி ஆற்றவுள்ளார்.

(ஐ-12)

## மனிதனின் செயற்பாட்டால் பூமிக்குப் பெரும்பங்கம்

### விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்

நியூயோர்க்,ஏப்.1

மனிதகுலத்தின் செயற்பாடுகள் காரணமாக பூமிக்குப் பெரும்பங்கம் ஏற்படிருக்கிறது. அடுத்த சந்ததிக்குப் பாதுகாப்பான உலகத்தை வழங்க முடியுமா என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது என விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

95 நாடுகளைச் சேர்ந்த 1,300 நிபுணர்கள் காலநிலை மாற்றம் தொடர்பாகத் தயாரித்த சர்வாம்ச அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உலக சமூகம் தமக்குரிய வளங்களைப் பெற்றுக்கொள்ளும் விதம் காரணமாக தவிர்க்க முடியாத மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவை பூமியின் உயிர் வாழ்க்கைக்கு உதவும் இயற்கை வழிமுறைகளைச் சீர்குலைக்கும் வகையில் அமைந்திருக்கின்றன என்று அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. மேற்படி குறித்த அறிக்கை நேற்றுமுன்தினம் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.

(ஐ)

## புதிய அனல் மின்நிலையத்தை எம்பிலிப்பிட்டியவில் அமைப்பதா?

### சீறுகின்றது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு, ஏப்.1

எம்பிலிப்பிட்டியவில் அனல் மின்நிலையமொன்று ஆரம்பிக்கப்படும் நடவடிக்கைக்கு ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

நேற்றுக் கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்திய ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. ஓமல்பே சோபித்த தேரர் மேற்படி முயற்சிக்கு எதிராக மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று கூறினார்.

மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பகுதியில் இவ்வாறான அனல் மின் நிலையம் அமைவது மக்களுக்குப் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துமென்று குறிப்பிட்ட அவர், இதனால், அமில மழை பெய்வதுடன், சுற்றாடல் பாதிப்புக்களும் ஏற்படுமென்றும் கூறினார்.

அனல் மின்நிலையத்தினால் அதிகளவாக வெளிப்படும் சத்தம் குழந்தைகளின் செவிப்பறையைத் தாக்குமென்றும் அந்தப் பகுதியில் பிறக்கும் குழந்தைகள் ஊனமுற்றுப் பிறக்கும் வாய்ப்பிருப்பதாகவும் வண.ஓமல்பே சோபித்த தேரர் மேலும் குறிப்பிட்டார்.

## அரச தரப்பு எம்.பிக்களின் முக்கிய கூட்டம் திங்களன்று

கொழும்பு,ஏப்.1

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட கூட்டமொன்று எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஆளும் கட்சி எம்.பிக்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளவேண்டுமென ஜனாதிபதி செயலகத்தினூடாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் அரசினுள் நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது ஆகியன குறித்தும் இந்தக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.


**புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை**

இன்று முதல் எமது நிறுவனத்தில் பிரதியாக்கம் செய்யும் அனைத்து அளவுகளிலுமான போட்டோக்களை அனைத்து வாடிக்கையாளர்களும் கொழும்பு விலையில் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

4 R - 9/=

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**

யாழ்.வீதி, மானிப்பாய்.
T.P. : 021 - 222 2884
(சி-41940)(29-16-17)



**மாகாண பொதுச் சேவை ஆட்சேர்ப்பு**
போட்டிப் பரீட்சை - 2005
வகுப்புகள் நடைபெறுகின்றன

ஆசிரியர் :- த.தவசேகர் B.Sc.,P.G.D.E

★DMI யாழ்நகர். ஒவ்வொரு சனியும் 3.00 மணி
★கிறிஸ்ரல் நெல்லியடி ஒவ்வொரு ஞாயிறும் 4.00 மணி
(43729)(29-16-17)



நெல்லை சில்க்
**அதிர்ஷ்டம்**

இந்த மாதத்திற்கான பட்டுச்சேலை அதிர்ஷ்டலாப இல.1715 நேரடியாக வந்து பட்டுச்சேலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

S.அகிலதாஸ்
உரிமையாளர்.
(சி-41938)(29-16-17)



**பூங்கன்றுகள் விற்பனைக்கு**

சாடியுடன் பூங்கன்றுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: ஞாயிறு காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை.
இல.80, பிரம்படி லேன்,
கொக்குவில். (43723)(29-16-17)



**நிறைஞ்சனாஸ் சங்கானை**
விஜய், திரிஷா நடித்த
கில்லி (ரீல்ஸ்)
கா.நேரம்: 11.00 2.45 6.00 (பு.நே)
(C/41377)(29-16-17)



**நாதன்ஸ் சினிமா** குரிகூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த
ஏய் (ரீல்ஸ்)
கா.நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே.)
விரைவில் குருதேவா
(C/41486)(22-11-46)



**ராஜா யாழ்ப்பாணம்**
இன்று மட்டும் பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
லண்டன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30,6.30. (பு.நே.)
நாளைமுதல் விஜய் நடித்த
(C/41381)(29-16-17)



**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
சூர்யா, ஜோதிகா நடித்த
மாயாவி (ரீல்ஸ்)
தினசரி 11.00. 3.00. 7.00 (பு.நே.)
(C/41380)(29-16-17)



**மனோகரா யாழ்ப்பாணம்**
பார்த்திபன்,காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த
கண்ணாடி பூக்கள்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (ரீல்ஸ்)
(C/41378)(29-16-17)


## 3 ஆம் வருட நினைவுகளுடன்

தோற்றம் 20 ~ 03 ~ 1939



மறைவு 01 ~ 04 ~ 2002

**அமரர் தாமோதரம்பிள்ளை ஜெயசிங்கம்**

(திருநெல்வேலி)
திதி: 29.03.2005
(Plant Manager Asbestos Çement industries ltd Ratmalana)

ஆண்டுகள் மூன்று நகர்ந்தாலும் உங்கள்
அழியாத நினைவுகள்
நாங்கள் வாழும் வரை என்றும்
எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.
(43722)(29-16-17)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் தட்டெழுத்தாளராகக் கடமைபுரியும் திருமதி கிருஷ்ணகுமாரி சிவச்சந்திரதேவன் அவர்களின் பாசமிகு தந்தை

**கதிரிப்பிள்ளை பாலசிங்கம்**

(பழைய வீதானை வளவு, பண்டகை - உடுப்பிட்டி)

அவர்கள் 30.03.2005 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தமையை அறிந்து மிகவும் துயரடைகின்றோம். அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், கோப்பாய்.

பிரதேச செயலரும் அனைத்து
உத்தியோகத்தர்களும்.
(சி-41942)(29-16-17)

We Serve

**வடமராட்சி லயன்ஸ் கழகத்தினதும் நல்லூர் லயன்ஸ் கழகத்தினதும் அனுசரணையில்**

**வடமராட்சி மக்களுக்கோர் அரியவாய்ப்பு**

லண்டன் குழந்தைநோய் வைத்திய நிபுணர்
**டாக்டர் பரமசிவம் சிவகுமார்**
M.B.B.S.(Cey.) F.R.C.P. (Lond.) F.R.C.P.C.H. (Lond.)

அவர்களால் மீண்டும் இரண்டாவது முறையாக குழந்தை நோய் சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கப்படும்.

இடம்: அரசினர் ஆதார வைத்தியசாலை,
மந்திகை, பருத்தித்துறை.

காலம்: 02.04.2005

சனி முற்பகல் 9 மணி - பிற்பகல் 1 மணி வரை

சிகிச்சையும் ஆலோசனையும் தேவைப்படும் குழந்தைகளை அழைத்து வந்து பயன்பெறுமாறு பெற்றோரை அன்புடன் அழைக்கின்றோம்.

லயன் எம்.தர்மலிங்கம்
தலைவர்,

லயன் எஸ்.சிவநாதன்
செயலாளர்.

(சி-41939)(29-16-17)
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி விமலாதேவி காராளசிங்கம்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது சுதுமலையில் வசித்தவருமான விமலாதேவி காராளசிங்கம் அவர்கள் நேற்று (31.03.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.C.லேன்,
சுதுமலை மேற்கு,
மானிப்பாய். (43731)(35-29-16-17)

தகவல்:-
கா.பிரேமி (மகள்),
ச.கனகநாயகம் (மைத்துனன்).

# இரவுக் களியாட்ட விடுதிப் பெண்களை தடுத்து வைத்துப் பொலீஸார் அடாவடி

கொழும்பு,ஏப்.1

ஆழிப்பேரலை ஏற்படலாம் எனக் கடந்த திங்கட்கிழமை எச்சரிக்கை விடுக்கப்பட்டபோது தம்மை காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடிய இரவுக் களியாட்ட விடுதியில் பணிபுரியும் பெண்களை கொள்ளுப்பிட்டி பொலீஸார் பலாத்காரமாகக்கொண்டு சென்று பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைத்தனர் என்றுமனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு சுமத்திரா தீவுக்கு அருகில் ஏற்பட்ட நில அதிர்வு பற்றி நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. கொள்ளுப்பிட்டி கடற்கரை பகுதியில் அமைந்திருக்கும் இரவுக்களியாட்ட விடுதியில் பணியாற்றும் பெண்களும் ஏனைய ஊழியர்களும் உடனடியாக வானொன்றில் அங்கிருந்து வெளியேறமுற்பட்டனர். அப்போது சிவிலுடையில் அந்த இடத்துக்கு வந்த பொலீஸார் பெண்களுடன் தகராற்றில் ஈடுபட்டுள்ளனர்.

பொலீஸாரின் இந்தச் செயலுக்கு எதிர்ப்புக் காட்டியதால் அப்பெண்கள் அனைவரையும் கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்குப் பலவந்தமாகக் கொண்டுசென்று அதிகாலை வரை அவர்கள் தடுத்து வைத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

சட்டபூர்வமாக இயங்கும் இரவுக் களியாட்ட விடுதியில் பணிபுரியும் பெண்களை எவ்வித காரணமும் இன்றி கைதுசெய்து அடாவடித்தனம் புரிந்தது அடிப்படை மனித உரிமை மீறல் செயல் எனக் களியாட்ட விடுதியின் உரிமையாளர் நாதன் இலங்கை மனிதஉரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இவ்விடயம் குறித்து பத்திரிகையாளர்களுக்கும் நாதன் விளக்கமளித்தார்.

கொள்ளுப்பிட்டி பொலீஸில் கடமையாற்றும் சில பொலீஸார் அடிக்கடி இது போன்ற அடாவடித்தனத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் இவ்விடயம் பற்றி விசாரணை செய்து வருகின்றார். (ஐ)

## அம்பாறையில் கண்காணிப்புக் குழுவுடன் புலிகள் சந்திப்பு

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மாலை சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் புலிகளின் சார்பில் அம்பாறை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் ரதன் கலந்துகொண்டார்.

படையினர் நடத்திவரும் சோதனை நடவடிக்கைகள், விசேட அதிரடிப்படையினரின் அத்துமீறல்கள் போன்றவை உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12)

## மூன்று ஆண்டுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.கே.ஈழவேந்தன் ஆகியோரே நேற்றுச் சந்தித்தனர்.

அமெரிக்காவுக்கும் தமிழ்மக்களுக்கும் இடையில் நல்ல உறவு நிலவிவருகின்றது. அந்த அடிப்படையில் இணைப்பாட்சி மூலம் தீர்வு கிட்ட அமெரிக்கா உதவ வேண்டும். இல்லையேல் தமிழ்[illegible] போது அமெரிக்கா ஆசீர்வதிக்க வேண்டு[illegible] கூட்டமைப்பு எம்.பிக்கள் கேட்டுக் கொண்டனர்.

தமக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும் என மக்கள் எதிர்பார்த்தனர். கடந்த மூன்று வருடங்கள் காத்திருந்த மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டு, அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராடத் தயாராகி விட்டனர். அரசின் இழுத்தடிக்கும் போக்குத்தான் இதற்குக் காரணம். அரசின் போக்கில் மாற்றம் ஏற்பட்டால்தான் நிம்மதியான நிலை ஏற்படும் என்றும் எம்.பிக்கள் சுட்டிக்காட்டினர்.

(ஐ-3)

## வாகரையில் மக்கள் பேரணி

வாகரையில் நேற்று மக்கள் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. பல நூற்றுக்கணக்கான மக்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்கள் உட்பட பேரணியில் கலந்துகொண்டோர் சுலோக அட்டைகளைத் தாங்கிச் சென்றனர்.

வாகரைப் பிரதேச பொதுஅமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மக்கள் பேரணியில் -

★ இடைக்கால நிர்வாகத்தினை உடனடியாக வழங்குதல் -

★ பொதுக்கட்டமைப்பை உருவாக்கல் -

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுத்தல் -

ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. பேரணியின் முடிவில் அரச அதிபர் ஊடாக பிரதமர், ஜனாதிபதி ஆகியோருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. இப் பேரணிக்கு வாகரைப் பிரதேச பொது அமைப்புகளின் வெகுசன ஒன்றியத்தின் தலைவர் சிவகுரு, செயலாளர் வேளினி ஆகியோர் தலைமை வகித்தனர். (ஐ-12)

## எரிபொருள் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று கொழும்பு செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்தது. (ஐ-12)

## உதயபுரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழே இறக்கப்பட்டுச் சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர்.

சமாதானச் சூழ்நிலையில் மீண்டும் இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ஆழிப்பேரலை அனர்த்தத்தில் ஆவணங்கள் இழக்கப்பட்ட நிலையில் சோதனைச் சாவடியில் அடையாள அட்டை கோரப்படுவதானது மனிதாபிமான மற்ற செயலெனவும் கரையோரப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ-12)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி கூட்டுவதற்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் சம்மதித்ததையடுத்தே, வேலைநிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சகல ஊழியர்களும் இன்று வெள்ளிக்கிழமை கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்று ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

இதேவேளை -

ஊழியர் சங்கத்தின் போராட்டம் இடைநிறுத்தப்பட்டிருப்பதை அடுத்து மாணவர்களின் விரிவுரைகள் அனைத்தும் எதிர்வரும் 4ஆம் திகதி தொடக்கம் வழமைபோல் நடைபெறும் என்று மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஐ-13)

## லண்டன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகளைச் சோதனைக்கு உட்படுத்திய பொலீஸார் மோசடிக் கடவுச்சீட்டுடன் அமர்ந்திருந்த தமிழ் யுவதியைக் கைதுசெய்தனர். அவரை அழைத்துச்சென்றவர் எனக்கருதப்படும் முகவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். வெளிநாட்டில் வசிப்பவரான இலங்கையரான இவர் வெளிநாட்டுக் கடவுச்சீட்டில் பெண்களைத் தனது மனைவி என்ற போர்வையில் அழைத்துச் சென்று லண்டனில் இறக்குபவர் என்றும் -

இதற்காகப் பல லட்சம் ரூபாவை அவர்களிடமிருந்து பெற்று வருபவர் எனவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாம். (ஐ-க)

## கரேஜஸ் கப்பல்:...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்காக சீன அரசுடன் இலங்கைக் கடற்படையினர் ஒப்பந்தம் செய்துகொள்ளவுள்ளனர். இந்த ஒப்பந்தத்திற்கே அமெரிக்கா கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயுத விவகாரம் தொடர்பில் சீனா குறித்து அமெரிக்கா கொண்டிருக்கும் கொள்கைரீதியான தீர்மானமே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

கரேஜஸ் கப்பல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் அமெரிக்காவிடமிருந்தே ஆலோசனைகளும், ஒப்பந்தங்களும் பெறப்படவேண்டுமென்று அமெரிக்கா வலியுறுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இந்தக் கப்பலில் பணியாற்றுவதற்காக இலங்கைக் கடற்படைக் குழுவொன்றுக்கு அமெரிக்கா பயிற்சியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-க)

## எஸ்.பியை விடுவிக்க கைநூல்

கொழும்பு.ஏப்.1

நீதிமன்றத்தை அவமதித்ததற்காக சிறைவாசம் அனுபவித்துவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கவை விடுவிப்பதற்குச் சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக்கட்சி ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய, எஸ்.பி.திஸநாயக்க கைதுசெய்யப்பட ஏதுவாக இருந்த காரணங்களை உள்ளடக்கிய கைநூலொன்றைத் தயாரித்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அதனை அனைத்து நாடுகளின் தலைவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் தபாலில் அனுப்பிவைக்கவுள்ளது.

இந்தப் பணிகள் எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. 'Freedom Cries for Justice' என்ற இந்த நூல் அனைத்து உலகப் பிரமுகர்களுக்கும் சமூகவியல் நிபுணர்களுக்கும் அனுப்பப்படவுள்ளது. (ஐ)

## அமைதி முயற்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்.

ஆழிப்பேரலைக்குப் பிந்திய மனிதாபிமான அடிப்படையிலான அனைத்துக் கட்டுமானப் பணிகளுக்கும் பின்லாந்து அரசு உறுதியாக ஆதரவளிக்கும் என்று அவர் உறுதியளித்தார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீடித்திருப்பதன் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர், அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லும் ஒரு வாய்ப்பாக ஆழிப்பேரலைப் பாதிப்புகள் உருவாகியுள்ளன என்றும் கூறினார்.

பொதுக்கட்டமைப்புக் குறித்தும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு நடைமுறைப் படுத்தாமல் இருப்பது குறித்தும் பின்லாந்து அமைச்சரிடம் தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

மேலும், உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமிழ்மக்களின் வாழ்விடங்களைத் தனது படைகள் மூலம் ஆக்கிரமித்துக் கொண்டு தமிழ் மக்களின் நாளாந்த இயல்பு வாழ்க்கையையும் இலங்கை அரசு சிதைத்துக் கொண்டு இருப்பதையும் சு.ப.தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார். பொதுக்கட்டமைப்பை உடனே உருவாக்கி ஆழிப்பேரலைக்குப் பின்னான மீளமைப்புப் பணிகளை தொடங்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களின் வன்முறைகள் யுத்தநிறுத்த ஒப்பந்த விதிகளை மீறும் செயல் என்றும் சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பில் அமைச்சர் எர்கியுடன் பின்லாந்து அரசுத்துறையின் அமெரிக்க ஆசிய நாடுகளுக்கான இயக்குநர் திருமதி எலினா ஹால்கு, ஆசிய அமெரிக்கப் பிராந்தியத்துக்கான தூதர் மைக்கோ பைகாலா, அமைச்சரின் சிறப்பு ஆலோசகர் போல்க் சன்மேன் ஆகியோர் உடனிருந்தனர். (ஐ-க)


Institute of Business Management Studies
IBMS
IBMS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு1:28.03.2005
பிரிவு2:03.04.2005
பகல் 10.00 மணி
Diploma Courses
Microsoft Office ➡ 1800/-
Internet Technology ➡ 3000/-
Desk Top Publishing ➡ 2400/-
Hardware Engineering ➡ 3750/-
Head Office
# 410, K.K.S.Rd., Jaffna.
Branches
NMMV Rd., Nelliady.
Sangathanai, Chavakachcheri.
(C-41935)(29-16-17)

நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
அன்றும் இன்றும் இனி என்றுமே
பொருளியல்
திரு. K. உதயன்
A/L 2006
பேரினப்பொருளாதாரம்
தேசியவருமானம்
ஆரம்பம்: 02.04.2005, 11.00– 12.00 மணி வரை.
(43718)(35-2916-17)

தபால் மூலம்
தபால் மூலம் குறைந்த கட்டணத்தில் பின்வரும் பயிற்சிநெறிகளைக் கற்க விரும்புபவர்கள் கற்கை நெறி பற்றிய விபரங்களை அறிந்துகொள்ள மேலதிக ரூ 5 முத்திரை ஒட்டிய நீள கடித உறையை வைத்து அனுப்பவும். கற்கை முடிவில் சான்றிதழைப் பெறலாம். இந்தத் திட்டத்தில் வயது வேறுபாடின்றி ஆண், பெண் அனைவரும் இணைந்து கொள்ளலாம். இலங்கையில் இருக்கும் அனைவரையும் இதில் இணைந்து பயன் பெறும்படி கேட்டுக்கொள்கிறோம். முழு விபரங்களை எதிர்வரும் ஞாயிறு உதயன் பத்திரிகையில் பார்க்கலாம். (1-04-2005)
(1) Dip in Electronics (Repairing) - 1000+1000/=
(2) Dip in Cellular Technology (Repairing) - 800/=
(3) Cer in Home Electronics & Cellulars (Ladies & Gents) - 400/=
(4) Cer in Electronics for Kids (Age Limit 11-15) - 400/=
MARCONI TECHNICAL INSTITUTE
410,2nd floor,Galle Road,Wellawatta.TP:2 361362

ஏப்ரல் பூலில் கூட நாங்கள் உண்மையானவர்கள்
விபரங்களுக்கு 04பக்கம் பார்க்கவும்

வீடு தேவை
சர்வதேச தரம் வாய்ந்த சிறுவர் பாடசாலைக்கு வசதியான வீடு தேவை. வண்ணார்பண்ணை, நீராவியடி நகரப்பகுதி, திருநெல்வேலி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி போன்ற பகுதிகளில் விரும்பப்படுகிறது. வாடகை பேசித் தீர்க்கலாம்.
தொலைபேசி மூலமாயின்
0777 730567, 222 3493
நேரிலாயின்
தொடர்பு: தாயகம், பொற்பதி வீதி, கோண்டாவில்.
(சி-41908)(29-16-17)

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, யாழ்.
SPOKEN ENGLISH
WITH GRAMMAR
speed batch
MR.T.THANENDRAN S.L.T.S.2-II
B.COM, H.N.D.A, P.G.DIP.IN.Edu.
பகுதி நேர விரிவுரையாளர் (English)
தொழில்நுட்பக் கல்லூரி.
புதியபிரிவு ஆரம்பம்: 02.04.2005 4.30 p.m.
(43730) (35-29-17-16)

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
A/L 2006 பௌதிக இரசாயனம்
சனி, ஞாயிறு :- 5.30 p.m.
A/L 2007 பொது இரசாயனம்
ஆசிரியர்
திரு.N.மகேஸ்வரன்
ஆரம்பம்:-02.04.2005, சனி 4.30 p.m.
(43709)(35-29-16-17)

இதய அடைப்பு நோய் குணமாக வேண்டுமா?
இதய அடைப்பு நோய்க்காக வாழ்நாள் முழுவதும் சிகிச்சை பெறவேண்டியதில்லை. எங்களுடைய ஆயுர்வேத மருத்துவம் மூலம் அதனைச் சில வாரங்களில் குணமாக்கலாம். இதய அடைப்புத் தொடர்பான சிகிச்சைகளை நாங்கள் உரியமுறையில், குறைந்த செலவில் வழங்குகிறோம்.
விவரங்களுக்கு:
FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
A BOI Approved & ISo 9001 : 2000 Qms Cetified Company.
(சி-41898)(29-17-16)

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.